# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 பள்ளுவர்ஆண்டு2030 புரட்டாதி19 புதன்கிழமை (06-10-1999) UTHAYAN ALivelyNationalTamilDaily கதிர்:269


## அடுத்த ஆண்டில் பாதுகாப்புச் செலவு 5,250 கோடி ரூபா!

## இந்த வருடத்தை விட 11.5 சதவீதம் அதிகம்

கொழும்பு, ஒக்ரோபர் 6

அடுத்த ஆண்டில் நாட்டின் பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஐயாயிரத்து 243 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்டதிலும் பார்க்க 11. 5 சதவீதம் கூடுதலான தொகையாகும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு-செலவுத் திட்ட அறிக்கைக்கு முன்னோடியாக—

அடுத்த மதிப்பீட்டு அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சார்பாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயினால் சமர்ப்பிக்கப்பட்டது.

பாதுகாப்புச் செலவீனத்துக்கு ஐயாயிரத்து 243 கோடியே 42 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் பாதுகாப்புச் செலவீனத்துக்கு நாலாயிரத்து 700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதும்—பின்னர் 20 முதல் 25 சதவீதத்தில் அச்செலவீனம் அதி

[15 ஆம் பக்கம் பார்க்க]

### தாக்கப்பட்டவர் நேற்று மரணம்

தென்மராட்சி, ஒக். 6

குழு ஒன்றால் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே. அருணந்தி (வயது 50) நேற்று அதிகாலை மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இவரது வீட்டுக்குள் அத்துமீறிநுழைந்தவர்களால் பொல்லுகளாலும் மரச்சலாகைகளாலும் கடுமையாகத் தாக்கப்பட்ட இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அதி தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட மீசாலை தெற்கைச் சேர்ந்த சிவகுமார் சதீஷ்குமார் நேற்றைய தினம் சாவகச்சேரி

(15 ஆம் பக்கம் பார்க்க)

### அரசு - புலிகள் பேச்சு சுமுகமாக நடக்க

## வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்

### ஐ. தே. க. தலைவர் ரணில் ஆலோசனை

கொழும்பு, ஒக். 6

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் 3 ஆம் தரப்பு ஒன்றின் உதவியுடன் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும். அந்தப் பேச்சுக்கள் சுமுகமாக இடம் பெற அக்காலகட்டத்தில் வடக்கு—கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்''

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிதிமுகாமையாளர்கள் மாநாட்டில் கலந்து பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது

நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சிகண்டுள்ளது. நாட்டுக்கு இன்று அவசரமாகத் தேவைப்படுவது பொருளாதார வளர்ச்சியும் சமாதானமுமேயாகும். இதற்கு உடனடியாக யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

யுத்தத்தை நிறுத்தவேண்டுமானால் அரசாங்கமும் விடுதலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க மூன்றாம் தரப்பு ஒன்றின் உதவி பெறப்படலாம்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில்

## வெளிநாடு ஒன்று தலையிடுவது ஐ. நா. கொள்கைக்கு முரணானது

### இப்படிக் கூறுகிறார் லக்ஷ்மன் கதிர்காமர்

கொழும்பு, ஒக். 6

இலங்கை இனப்பிரச்சினையில் இரு நாடுகள் சம்பந்தப்படவில்லை. எனவே வெளிநாடு ஒன்று இதில் தலையிடுவது ஐ. நா. வின் கொள்கை நியந்தனைகளுக்கு முரணானது. என்று கூறுகிறார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

பி. பி. ஸி. க்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை மீண்டும் நிராகரித்துள்ள அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், ''இந்த விடயத்தில் தேவைப்பட்டால் ஏனைய நாடுகள் துணையளிப்பதை வரவேற்போம்; மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்கப்போவதில்லை என்று கூறினார்.

இனப்பிரச்சினை இலங்கையின் உள்விவகாரம். இந்த விவகாரம் இலங்கைக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டியது அவசியம் என்றும்—அவர்சொன்னார்.

கதிர்காமரின் கருத்துக்கு தமிழ்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவிக்கின்றன.

## யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டுக்கான 18 ஆவது பட்டமளிப்பு விழா இன்று காலை 9. 30 மணி முதல் மூன்று அமர்வுகளில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கின்றது.

மொத்தம் 476 பேர் இம்முறை பட்டம் பெறவுள்ளனர்.

முதலாவது அமர்வு காலை 9. 30 மணிக்கும்—

இரண்டாவது அமர்வு காலை 11. 30 மணிக்கும்—

மூன்றாவது அமர்வு பிற்பகல் 2. 30 மணிக்கும்—இடம்பெறும்.

முதலாவது அமர்வில் தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் பாரதரத்ன சி. சுப்பிரமணியத்துக்கு 'இலக்கிய கலாநிதி' கௌரவப்பட்டம் வழங்கப்படவிருக்கின்றது. எனினும் அவர் இன்றைய நிகழ்வில் பங்குபற்றமாட்டார் எனத் தெரிகின்றது.

இன்றைய விழாவுக்கு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கு தெல்லிப்பழை' துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தினர் ஞாபகச்

[15 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் டிரக் மீது ஆர். பி. ஜி. தாக்குதல்!

### இரு படையினர் படுகாயம்

திருகோணமலை, ஒக். 6

திருகோணமலைமாவட்டத்தில் வில்கம் விகாரைச் சந்தியில் சென்ற படையினரின் டிரக் ஒன்றின் மீது நேற்று மாலை 3 மணியளவில் ஆர். பி.ஜி. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலால் அந்த டிரக் பலத்த சேதத்துக்குள்ளானது. இரு படையினர் படுகாயமடைந்தனர்.

அதன் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் தேடுதல் மேற்கொண்டனர்.

(உ-3-21)

## செட்டித்தெருவில் குண்டுவெடிப்பு பதினெட்டுத் தமிழர் கைதாகினர்

கொழும்பு, ஒக். 6

கொழும்பு செட்டியார் தெருவில் அமைந்துள்ள மின்மாற்றிக்கு அருகே நேற்றுக் காலை 8. 30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் மின்மாற்றிக்கு ஓரளவு சேதம் ஏற்பட்டது. அதற்கு அருகில் இருந்த கடைகள் சிலவும் சேதத்துக்குள்ளாகின.

இந்தக் குண்டு வெடிப்பை அடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துப் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது 18 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பகுதியில் ஏற்கனவே இருதடவைகள் மின்மாற்றிகளில் குண்டுகள் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-3-6-7)

## நானுஓயாவில் நேற்று தேடுதல் 10 தமிழர் உட்பட 13 பேர் கைது

கொழும்பு, ஒக். 6

கொழும்பு - பதுளை ரயில் பாதையில் நானு ஓயாவுக்குச் சமீபமாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மூன்று சிங்களவர் உட்பட 13 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நானு ஓயா, பதுளை ஆகிய பிரதேசங்களில் படையினர் நேற்று நடத்திய தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 3 சிங்களவர்களும், 10 தமிழர்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்றும்—

இந்தச் சம்பவத்துடன் நேரடியாக இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்றும்—

பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3)

### ஊழியர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று காஸ் சிலிண்டர் ஒன்றை பழுதுபார்ப்பதில் ஈடுபட்டிருந்த ஆஸ்பத்திரி சிற்றூழியர் ஒருவர் சிலிண்டரின் வால்வு திடீரெனப் பறந்து தாக்கியதில் இடதுகண் பார்வையை இழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த அரியகுட்டி கமலீஸ்வரன் [வயது 38] என்பவரே பார்வையை இழந்தவராவார்.

(உ-7)

## ஆளுநர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஒக். 6

மாவட்ட இணைப்புக்குழு மற்றும் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவும் மாகாண அமைச்சைச் சேர்ந்த 9 அதிகாரிகளும் இம்மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டமும் 13 ஆம் திகதி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும் நடைபெற உள்ளது.

ஆளுநரின் செயலர் எஸ். கணேசநாதன், மாகாண அமைச்சு செயலாளர் எஸ். பரமலிங்கம், உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். சபாபதிப்பிள்ளை உட்பட ஒன்பது அதிகாரிகள் ஆளுநருடன் யாழ். விஜயம் செய்யவுள்ளனர்.

[உ-5]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை அருணந்தி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானை சாவகச்சேரியை இருப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை அருணந்தி அவர்கள் (செயலாளர் பிரதேச சபை, சாவகச்சேரி) அகால மரணமானார்.

இவர் நயினாதீவு வேலாயுதபிள்ளை நாகரத்தினத்தின் ஏகபுதல்வரும், குணமணியின் அன்புக் கணவரும், கௌசல்யா (ஆசிரியை, அல்லாரை) செந்தூரன் (லண்டன்), மயூரன் (கொழும்பு), ஆரூரன் (மாணவன், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்), சுகன்யா (இந்துக் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேதாரகௌரி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), றீற்றா ஜானகி (வரி மதிப்பீட்டு இலாகா, கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் திருச்செல்வம் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), இராஜேந்திரம் (இளைப்பாறிய வரி மதிப்பீட்டு இலாகா உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் தர்ஷினி (கச்சேரி நிதிக் கிளை, யாழ்ப்பாணம்), திருக்குமரன் (பழைய மாணவன், யாழ் இந்துக்கல்லூரி), ஜனரஜனி, நர்த்தனி, கிருஷன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (06-10-99) பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும் என்பதைத் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
செ. திருச்செல்வம்
(மைத்துனர்)

இல. 3, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம் (69725)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 – 04 – 1904

மறைவு: 06 – 09 – 1999

### திருமதி மயில்வாகனம் இளையாச்சி

அன்பும் கண்டிப்பும் ஒரே இடத்தில் என்பார்கள். அந்த அன்பையும் கண்டிப்பையும் தந்து எம்மை ஆளாக்கி வளர்த்து விட்ட எம் தாயின் 31 ஆம் நாளில் அவரை நினைவு கூருகிறோம்.

இன்று [06 - 10 - 1999] புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடனும் தாழ்மையுடனும் வேண்டப்படுகிறீர்கள்.

பிரிவால் துயருறும்
பாசமிகு பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

வலவன்தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (69710)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06 – 10 – 1948

மறைவு: 17 – 09 – 1998

திருமதி

### மகேந்திரன் சாரதாதேவி

ஆண்டொன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஒரு நொடியில் போனதம்மா உமது உயிர்
மீண்டும் இங்கு வாருமம்மா
விழி நீர் சொரியக் காத்திருப்போம்.

துயரால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்.

செருக்கப்புலம் ஒழுங்கை,
கொக்குவில். (69720)

## மாணவர்கள் சிரமம்

அளவெட்டி ஒக். 6

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள போதிலும் மாணவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகள் சீர்செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை வளவில் உள்ள ஒரு கிணறு இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ள போதிலும் மாணவர்கள் ''கப்பி'' மூலமே நீரைப் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இடை வேளை நேரம் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (இ-13)

## பயிற்சிக்கு அழைப்பு

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வீரர்களை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சிக்காக யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ரி)

* * *

யாழ். மாவட்ட 22 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவாகியுள்ள 12 வீரர்களையும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எஸ். டிலான், ரி. கௌரிபாகன், கே. பிரகாஷன், எஸ். செந்தூர், எல். கிங்ஸ்டன், ஜெ. நிரோஷன், ஐ. ஜெயரஞ்சன், எஸ். அமிழ்தன், பி. சிவகரன், பி. கேதீஸன் ஜெ. நிமல்ராஜ், எம். நியூட்டன் ஆகியோரே தெரிவாகியுள்ளவர்கள் ஆவர். (உ-ரி)

### வடக்கு–...

(முதலாம் பக்கத் தொடர்)

பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் வடக்கு — கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் யுத்தத்தை விஸ்தரிக்கும் சாத்தியம் காணப்படுவதால் உடனடியாகவே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டியது அவசியமானது—என்றார். (உ-3-7-21)


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
பிரசாந், சிம்ரான்
நடித்த
ஜோடி
[புதிய வெளியீடு]
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
(69659)

ராஜா
யாழ்ப்பாணம்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
பாண்டியன்
10-30, 2-30
8 ஆம் திகதி முதல்
ரோஜாவைக்
கிள்ளாதே
(சி/9159)

நாகலிங்ஸ்
நன்னாகம்
இன்று முதல்
விஜய் -சங்கவி-சுவாதி
ரகுவரன்
நடித்த
செல்வா
காட்சிகள் 11-00, 2-30
(புதிய நேரம்)
(69694)


## வட இலங்கை சங்கீத சபை வாழ்த்துகின்றது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
''முதுகலைமாணி'' கௌரவ பட்டத்தினை
வழங்கி கௌரவிக்கும் சங்கீத சபையின் உப தலைவர்

### கலாபூஷணம் பேரா. சந்திரசேகரம்

அவர்களையும்

சங்கீத சபைக் கீதத்தை இயற்றிய

### மகாவித்துவான் ந. வீரமணிஐயர்

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவர்களுடைய சேவை என்றென்றும் வட இலங்கை சங்கீத சபையின் வளர்ச்சிக்கு உதவட்டும்!

— வடஇலங்கை சங்கீத சபையினர்

(சி/9220)

## உளமார வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி அபிவிருத்திச் சங்க செயலாளரும்
யாழ். பல்கலைக்கழக பதில் நிதியாளருமான

### திருமிகு க. கனகரத்தினம் அவர்கள்

முதுதத்துவமாணிப் பட்டத்தை
இன்று (6 - 10 - 99) பெறுவதை ஒட்டி அவரை பாராட்டி வளம்பல பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
(சி/9215)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சிவசுப்பிரமணியம்

(வரி மதிப்பீட்டாளர், கொழும்பு மாநகர சபை)

யாழ்ப்பாணம் முதலியார் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவசுப்பிரமணியம் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற முன்னாள் கிராமசேவையாளர் வெற்றிவேலு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் சிவமகாதேவியின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 07-10-99 வியாழக்கிழமை அவரது கொழும்பு இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தி. ஆனந்தி
(மருமகள்)

263/3, காலிவீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு- 03. (69701)

### கதிரவேலு விக்கினேஸ்வரன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு விக்கினேஸ்வரன் 28-09-99 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கதிரவேலு தற்பொழுது மல்லாகத்தில் வசிக்கும் பரிபூரணத்தினது பாசமிகு மகனும் அருளானந்தம், காலஞ்சென்ற சதாசிவம், சச்சிதானந்தம் [இளைப்பாறிய சஹிராக் கல்லூரி ஆசிரியர்], சொக்கநாதன் [லண்டன்], சபாபதிப்பிள்ளை, செல்வராணி, காலஞ்சென்ற கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சி. அகிலேஸ்வரன் [இளைப்பாறிய ஆசிரியர்], ச. சிவனேஸ்வரி, சொ. தேவமனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகிரதி. சிவரூபன் ஆகியோரின் மாமனாரும் சிவகௌரி, ராஜி, ஜிகான் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07-10-99) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
க. அருளானந்தம்
(சகோதரன்)

தமிழ் பாடசாலை ஒழுங்கை,
மல்லாகம். [69715]

### செல்லப்பா மாணிக்கவாசகர்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வரணி வடக்கை வதிவிடமாகவும்கொண்ட செல்லப்பா மாணிக்கவாசகர் (இளைப்பாறிய ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்கள் நேற்று 5-10-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் ராசேந்திரம் சுந்தரேஸ்வரி, சிவானந்தா, கௌரி, வாசகிதாசன், தயானந்தன், இகபரேஸ்வரி விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-10-99) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மசோரி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ராசேந்திரம்
(மருமகன்)

வரணி வடக்கு,
வரணி. (சி/9213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகள் -- 2,000

வட இலங்கைச் சங்கீத சபையின் 2,000 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான [விண்ணப்பப்படிவங்கள் 1999—09—01 புதன்கிழமை முதல் விற்பனைக்கு வந்துள்ளன, விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை (அறிவுறுத்தல் பிரதியுடன்) ரூபா 20.00,

முடிவு திகதி: 26–11–1999.

விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்பும் தேர்வு நாடிகள் ரூபா 20.00 பெறுமதியான காசுக் கட்டளை ( எம். ஓ. ) யுடன் ரூபா 3.50 பெறுமதியான தபாற் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் ( 10 செ. மீ, X 22 செ. மீ. ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தேர்வு நாடி ஒருவர் ஒரு படிவத்தில் ஒரு பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கோ அல்லது தரத்திற்கோ ஒரே படிவத்தில் விண்ணப்பித்தால் அத்தகைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

காசுக்கட்டளைகள் 'வட இலங்கைச் சங்கீத சபை' என்ற பெயரில் பெறப்பட்டு யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அமைதல் வேண்டும்.

பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்களை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

01) வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

02) திரு. வி. எம். குகானந்தா,
கொ/விவேகானந்தாக் கல்லூரி,
புதுச் செட்டித் தெரு, கொழும்பு.

03) திரு. க. தவமணிதாசன் [ஆசிரியர்]
வவு/இரம்பைக்குளம் மகளிர் ம. வி.
வவுனியா.

04) திரு. எஸ். கே. சதாசிவம்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கிளி.-முல். இணைப்பாளர்,
கச்சேரி. வவுனியா.

05) திருமதி ட. முருகுப்பிள்ளை,
பிரதிக் கல்விப் பணிப்பாளர் [சங்கீதம்]
கல்வித்திணைக்களம், திருகோணமலை.

**திருமதி செ. மகாலிங்கம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்.
உப தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.
(சி/8820)

# ஆலயத்தில் திருட்டு

கோப்பாய், ஒக். 6

கோப்பாய்வடக்குபாலனை கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த வாரம் இரவு வேளையில் திருட்டுச் சம்பவம் ஒன்றுஇடம்பெற்றுள்ளதாகத் கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயக் கூரையைப் பிரித்து இறங்கிய திருடர்கள் மூலஸ்தானம், வசந்தமண்டபம் ஆகியவற்றின் கதவுகளை உடைத்ததுடன் அரிசிமூடை, சுவர்மணிக்கூடு போன்றவற்றையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கோப்பாய்ப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-72)

# இளம் கர்ப்பிணித்தாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

குழந்தை பிரசவித்த சில மணி நேரத்தில் தாய் உயிரிழந்த சம்பவம் யாழ். போதனா வைத்தியசாலையில் சில தினங்களின் முன்னர் இடம்பெற்றது.

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் ஒழுங்கையைச் சேர்ந்த பரராசசிங்கம் ஜெயக்குமாரி (வயது 33) என்பவரே மரணமானவராவார்.

இவருடன் சேர்த்து கடந்த வாரம் மட்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் மூன்று கர்ப்பிணித்தாய்மார் பிரசவவேளையில் உயிரிழந்துள்ளனர்.

(இ-ம)

# இளவாலையில் முத்தமிழ் விழா

இளவாலையில் புனித ஹென்றியரசர் கல்லூரியின் முத்தமிழ் விழா அதிபர் வண. ய. பே. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் இளவாலை மெய்கண்டான் பாடசாலை அதிபர் அ. பேரம்பலம் கலந்து கொண்டார்.

கவியரங்கம், நடனம், நாட்டார் பாடல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ம-48)

# வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமான இன்று
எமது பாடசாலையில் கல்வி போதிக்கும்
**எமதினிய அன்புக்குரிய ஆசிரியர்கள்**
அனைவரும் சகல சிறப்பும் பெற்று வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள்,
கரணவாய் மகா வித்தியாலயம்.
(சி/9201)

# வாழ்த்துகின்றோம்


எமது வாழ்வில் கல்விக்கண் திறந்து
ஒளியேற்றி வழிகாட்டிய
சுன்னாகம்
**ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின்**
அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்
மற்றும் ஏனைய சக பாடசாலை ஆசான்கள்
அனைவரையும் இந்நன்னாளில் இதயபூர்வமாக
வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஸ்கந்தாவின் மைந்தர்கள்
97 கலைப்பிரிவு.

ஆந்தரோடை, சுன்னாகம். [சி/9199]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
06 — 02 — 1955



இறைவன் அடியில்
17 — 10 — 1998

அமரர் **சின்னத்துரை நேசலிங்கம்**
( அருள் )
[ அருள் விறகுகாலை ]
திதி: 06 – 10 – 1999 புதன்கிழமை

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் எங்களை
வழிநடத்தி வாழ வைத்த அன்புத் தெய்வமே!
எங்களை விட்டு விரைவில் இறைவனடி சேர்ந்தாலும்
உங்களை நாம் மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி
பிள்ளைகள்: நே. மயூரி, நே. கபிஷன்,
நே. ரஜீவன்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். [69672]

# சேவை நலன் பாராட்டு



தென்னிந்திய திருச்சபையைச்சார்ந்தவரும்
பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்களின்
உயர் கல்வி மாணவரும்
மெமோறியல், யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின்
பழையமாணவரும்
இங்கிலாந்து ஜேசி. முகாமைத்துவ கலாசாலையில்
வர்த்தக முகாமைத்துவநிர்வாகத்துறையில்சிறப்புத்
தேர்வு பெற்றவரும்
அமெரிக்க அட்வேஸ் உற்பத்தி கொம்பியூட்டர்
அதன் உற்பத்தி உச்சவேகத்தில் இயங்கியமைக்காக
1991 இல் எகிப்திய உற்பத்தி பொறியியலாளர்
G A. கரீம் அவர்களின் பாராட்டைப் பெற்றவரும்
நிறுவன திட்டமிடல், மீளாய்வுத் துறையில்
சிறப்பாற்றல் கொண்டவரும்
சர்வதேச ஐக்கிய உணவுக் கைத்தொழில் கூட்டுத்
தாபனத்தின் முன்னாள் உற்பத்தி இணைப்பாளரும்
மானிப்பாய் ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவரும்

கிறீன் வைத்தியசாலை, மக்லியோட் வைத்தியசாலை ஆகியவற்றின்
முன்னாள் செயலருமான

**லயன் எஸ். ஜே. செல்வராஜா** அவர்கள்

மக்கள் சேவைத் தொடர்பு ஊடகங்களாகிய கூட்டுறவு, சர்வதேச லயன்ஸ் கழகம், சனசமூக அபிவிருத்தி, பிரதேச முன்பள்ளி ஆசிரிய சங்கம், பாடசாலை அபிவிருத்தி, மதசார்பு நிர்வாகம் போன்ற பல பொதுஸ்தாபனங்களில் கௌரவ பதவி வகித்து அவைகளூடாக மக்களுக்கு ஆற்றும் தன்னலமற்ற சேவையை வாழ்த்துகின்றோம். தனது தளராத முயற்சியால் சாவற்கட்டு பகுதியில் எழுபது தம்பதியினருக்கு இலவச திருமணப்பதிவை மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் ஊடாக நடத்திய கழகச்செயலாளரும் பொதுசன தொடர்பு பிரிவு செயல் திட்ட தலைவரும் பல் துறைசார்ந்த செயல் ஆற்றல் மிக்கவருமான லயன் எஸ். ஜே. செல்வராஜா அவர்களின் சேவைகள் வாழ, வளர இறையருளை வேண்டுகின்றோம்.

இ. யோகராசா
யுவசக்தி சனசமூக நிலையம்,
சுதுமலை.
(தலைவர்)

இ. சிவநேசன்.
மகாத்மா சனசமூகநிலையம்,
சுதுமலை.
(69676)

A GURANTEED PRODUCT
KOBE
ANTENNA
BOOSTER
NO:1
SELLER IN SRI LANKA
FROM LANKA NIPPON
AVAILABLE ISLANDWIDE
ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE
LANKA NIPPON
18, KEYSER STREET, COLOMBO-11
Tel: 324726, 437735 FAX: 437736
[சி/9184]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின்
ஈழமக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினரும்
சமாதான நீதிவானுமாகிய

### அமரர் கனகசபை இராசதுரை

(வீரபத்திரர் கோயிலடி, சாரையடி, புலோலி)

தாயின் மடியில் **07 - 05 - 1957** தாயக மண்ணில் **06 - 10 - 1998**

எமது பிரதேச வாழ் மக்களின் உயர்ச்சிக்காக
அயராது உழைத்த எம் கண்மணி இராசதுரையே
ஓராண்டு சென்றாலும் உம் சேவை என்றும்
எம் மனதை விட்டகலாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சபை உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி. (சி/9147)

## 3 ஆம்ஆண்டின் நீங்காத நினைவில்



செல்வன்

### இராசேந்திரம் பிரதீபன்

(தீபன்)

அன்னை மடியில்: 27 – 02 – 1983 ஆண்டவன் அடியில்: 09 – 10 – 1996

திதி: 06 – 10 – 1999

பாங்குடன் நீ பாரில் வாழும்
ஏற்றம் காணும் வேளையில் — நின்
நீங்கா நினைவில் ஏங்கி
தாங்கொணாத் துயரில் தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா, சகோதரர்கள்.

புலோப்பளை,
பளை. (69661)

## பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 6

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள ஆறு பாடசாலைகளினது மாணவ, மாணவிகளுக்கு இடையிலான பொது அறிவுப் போட்டி ஒன்றை உரும்பிராய் லயன்ஸ் கழகம் கடந்த புதன் கிழமை நடத்தியது.

பெரும் எண்ணிக்கையான மாணவ, மாணவிகள் பங்குபற்றிய இந்தப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை அரசியல், விஞ்ஞானம், சமூகம் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட பரந்த கேள்விப் பரப்பு உடையதாக இருந்தது.

[இ-ரி]

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 6

நெடுந்தீவுக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டிகள் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் நடைபெற்றன.

நெடுந்தீவுக் கோட்டக்கல்வி அதிகாரி க. அரசரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தீவக வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீ. ராமச்சந்திரன் போட்டிகளை ஒழுங்குபடுத்தினார்.

[இ-7]

## அம்பாறைக்கு சமாதானக்குழு

கொழும்பு, ஒக். 6

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களுக்கு வன்னி சமாதானக்குழு இந்த வார இறுதியில் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண சங்க நாயக்கர் சங்கைக்குரிய சியம்பலா கஸ்வெவ விமல தாரதேரர் தலைமையில் அங்கு செல்லவுள்ள இந்தக் குழுவினர் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## மாணவரிடையே போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 6

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 74 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். நாச்சிமார் கோயிலடி பிரசாந்தி நிலையம், பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டிக்கான விவரங்களைக் காங்கேசன் துறை வீதி, நாச்சிமார் கோயிலடி பிரசாந்தி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## மிதிவெடியில் காளைமாடு சிக்கியது

அளவெட்டி, ஒக். 6

கைவிடப்பட்டிருந்த காவல் அரண் பகுதியில் புல் மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த காளை மாடு ஒன்று மிதி வெடியில் சிக்கி கால் ஒன்றை இழந்தது.

இச்சம்பவம் அளவெட்டி வடக்கு தஞ்சிட்டி என்ற இடத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இப்பகுதியில் இதுவரை ஏழு மாடுகள் மிதி வெடியில் சிக்கி காயமடைந்துள்ளன.

(ஐ-14)

## துன்னாலையில் மின் துண்டிப்பு

யாழப்பாணம், ஒக் 6

கலிகைப் பகுதியில் உள்ள ஜெனரேட்டர் பழுதடைந்ததால் துன்னாலைப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த ஒருவார காலமாக இப்பகுதிக்கான மின் துண்டிக்கப்பட்டுள்ளது.

(ஐ-15)


## வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவில் தலை சிறந்த ஆசிரியராகவும் அதிபராகவும் சமூக சேவையாளராகவும் கடமையாற்றி இன்று தீவக வலயமுன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

### திரு. த. தவராசா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அரியநாயகன்புலம்
ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
இறுப்பிட்டி, புங்குடுதீவு மேற்கு.

(69670)

## பொய்யாமொழி ஜோதிடம்

இன்று (6—10—99) புதன்கிழமை மட்டும் 111/3, கோயில் வீதி நல்லூரில் சந்திக்கலாம். பின் புதிய விலாசம் அறிவிக்கப்படும்.

நவராத்திரி முடியும் வரை மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் மாலை 3 மணிக்குப் பின் தினமும் [ஞாயிறு] சந்திக்கலாம்.

V.S.S குருக்கள்.

(69665)

## 2,000 ஆம் ஆண்டு G.A.Q.

யாழ்., பேராதனை (வெளிவாரி)
**பட்டப்படிப்பு**

★ தமிழ் ★ இந்துநாகரிகம் ★ அரசியல்
★ வர்த்தகக் கட்டமைப்பும் முகாமைத்துவமும்
★ மெய்யியல் ★ உளவியல்
★ சமூகவியல் ★ ஆங்கிலம்
ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன.


தென்மராட்சி உயர்கல்வி நிலையம்,
இல. 5, சிவன் வீதி, சாவகச்சேரி.

(69662)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## ஆறாம்மாதநினைவஞ்சலி

மண்ணில் 05 – 12 – 1931



விண்ணில் 13 – 04 – 1999

அமரர்

### ஏகாம்பரம் பேரின்பராசா

[முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்,
இலங்கை மத்திய வங்கி கணக்காய்வுப் பிரிவு]

திதி:06 - 10 - 1999 அபரபக்கதுவாதசி

எங்கள் பாசமிகு அப்பாவே!
ஆறுமாதம் ஆனதப்பா
ஆறிடுமோ எம் துயரம்?
ஆதரிக்க ஆயிரம் உறவுகள் உண்டு
எம்மால் ஆறவும் முடியவில்லை
தேறவும் வழி தெரியவில்லை
அந்தோ! நீர் சென்ற பின்
நாம் படும் துன்பம் யாரறிவார்?
உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
இப்புவியில் நாம் இருக்கும் வரை
எங்கள் இல்லத்தில் நல்லொளி பரப்பி
எமக்கு வழிகாட்டும்!

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மன் வீதி,
தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி. (சி/9185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பல்கலைக்கழக வெள்ளி விழா

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் இன்று ஒக்ரோபர் ஆறாந்திகதி தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. இந்தப் பிரதேசத்தின் உயர் கல்வி வளர்ச்சியிலும் வளத்திலும் அக்கறை உள்ள அனைவரும் இது கண்டு அக மகிழ்வர். உயர்கல்வியின் மிக உயர் பீடமான பல்கலைக்கழகம் ஒன்று இங்கு நிறுவப்பட்டதால், வடபகுதி மாணவரின் உயர் கல்வி நிலை பல வகைகளிலும் மேம்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியம் மிகவும் பழைமையானது. சங்கிலி மன்னன் காலத்திலேயே, பதினாறாம் நூற்றாண்டிலேயே இங்கு கல்வி வளம் செழித்துச் சிறப்புற்று இருந்ததாக அறியக் கிடக்கிறது. இடைக்காலங்களில் தொய்வு நிலை ஏற்பட்டதும் உண்டு எனினும் கல்வியையே தங்கள் பெரும் செல்வமாக, சொத்தாக மதித்து யாழ்ப்பாணத்தவர்கள் அதனைத் தொடர்ந்தும் பேணி வளர்த்து வருகிறார்கள்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்திலேயே பல்கலைக்கழகம் ஒன்று பிறந்து, வளர்ந்து, வாலிபப் பருவம் அடைந்திருப்பது பெரும் பாக்கியமே. பல இடுக்கண்கள், இடைஞ்சல்களை எதிர்நோக்கிய போதிலும் அது இன்றைய நிலைக்கு வளர்ந்திருப்பது எமது பிரதேச மக்களின் கல்வி மீதான பற்றுறுதியைப் பிரதிபலிக்கிறது. எமது முன்னோர் கல்விக்காக இட்ட வினையின் விளைச்சல் என்றும் சொல்லலாம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வடக்கு வாழ் மக்களின் அரும் பெரும் சொத்து. அதன் வளர்ச்சியும் உயர்ச்சியுமே இப் பிரதேச மாணவர்களின் உயர் கல்விக்கான உயிருமாகும். ஆகையால் அதற்குப் பலவகை ஊட்டச் சத்துக்களையும் உயிர்ச் சத்துக்களையும் ஊட்டி வளர்க்க இங்குள்ளோரும் வெளிநாடுகளில் வாழும் நம்மவரும் உளமார உதவ வேண்டும்.

தற்காலத்து நவீன கல்வி முறைகள், மாற்றங்களுக்குஏற்ப, அவற்றுக்கு ஈடு கொடுத்து யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி மேன்மேலும் பன்மடங்கு வளர வேண்டும். அதற்குப் பலவகை சார் கல்வி வளங்கள் தேவை. அவற்றைப் பெற்று புதிய கல்வி அமைப்புடன் (New Education Order) இணைந்து செல்வதே பல்கலைக்கழகத்தின் புதிய இலக்காகவும் பார்வையாகவும் அமைய வேண்டும்.

இத்தகைய இலக்கும் பார்வையும், பல்கலைக்கழகக்கல்வி இந்தப் பிரதேசத்து மக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் மூலாதாரமாக அமைந்து கைகொடுக்க வகை செய்ய வேண்டும். இம் மண்ணில் மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பெரிய அளவில் பல்கலைக்கழகம் உதவ வேண்டும்.

எங்கள் பிரதேசத்து வளங்கள் அனங்காணப்படுதல், அவை குறித்து ஆய்வுகள், ஆராய்ச்சிகள் செய்தல். ஆய்வுகள்ஆராய்ச்சிகள் மூலம் மக்களின்வாழ்க்கை வளம் மேம்படுத்தப்படுதல் என்பவற்றில் இதுவரை நிலவிய மந்த நிலை அகற்றப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்து முருங்கையை ஆராய்ச்சி செய்து புதிய இனங்களை உருவாக்கி அவற்றின் காய்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு தயாராகிறது என்ற செய்தி எங்கள் பல்கலைக்கழகத்தை த விழிப் புணர்ச்சிபெறச் செய்ய வேண்டும். [இது ஒரு சிறிய உதாரணமே]

வெள்ளிவிழாக்காணும் யாழ். பல்கலைக்கழகம் புதிய வழியில் உத்வேகத்துடன் செயலாற்றி மேலும் பொலிவு பெறுவதாக!

# அறியாமை என்னும் இருள் நீக்கி அறிவொளி பரப்பும் ஆசிரியர் சமூகம்

இன்று சர்வதேச ஆசிரியர் தினமாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

**எஸ். என். அரசரத்தினம்**

உலகிலே உள்ள தொழில்களில் முக்கிய தொழிலாக முதலிடம் பெறுவது ஆசிரியத் தொழில். இந்தத் தொழில் பணத்துக்காகச் செய்யாது தொண்டாகக் கருதிச் செய்யும் ஒரு புனிதத் தொழில் ஆகும்.

ஆசிரியத்தொழில் தன்னலங் கருதாது மாணவர்கள் நலன் கருதிச் செய்யும் ஒரு தொண்டாகும்.

பிள்ளைகளைப் பெற்று உணவூட்டி உடலை வளர்ப்பது பெற்றோர். அறிவையூட்டி உள்ளத்தை வளர்ப்பவர்கள் ஆசிரியர்கள்.

இந்தமட்டில் ஆசிரியர்கள் அந்தப் பிள்ளைகளுக்கு ஒரு விதத்தில் தந்தையாகிறார்கள். இன்றைய குழந்தை நாளையமனிதன். அவனைக் கல்வி அறிவுள்ளவனாகவும் கடவுட்பக்தி உள்ளவனாகவும் ஒழுக்கமுள்ளவனாகவும் ஆக்கும்பொறுப்புஆசிரியரைச் சார்ந்ததாகும். இக் காரணம் கருதியே வருங்கால உலகைச் சிருஷ்டிப்பவன் ஆசிரியன் என்று சொல்லப்படுகின்றது.

ஆசிரியர் ஒரு சமூகத்தோடு வாழ்வது மட்டுமன்றி அச் சமூகத்தையும் வளர்க்கின்றான். எனவே ஒரு சமூகத்தின் முக்கிய அங்கத்தவர் ஆசிரியர். இதனால் மாணவர்களுக்கு ஆசிரியரில் நம்பிக்கையும் கவர்ச்சியும் ஏற்படுகின்றது. குரு எவ்வழி சீடன் அவ்வழி என்பது பழமொழி. உலகுக்கு கல்வியறிவும் நன்னடத்தையுமுள்ள மக்களை உருவாக்கி அளிப்பதே உத்தம ஆசிரியரின் மகத்தான தொண்டாகும்.

மாணவர்களை மதிப்பீடு செய்து அவர்களின் மன நிலைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு கற்பித்து மாணவன் முன்னேறப் பாடுபட்டு உழைப்பவர்கள் ஆசிரியர்கள்.

ஆசிரியர்கள் உழைப்புக்காக வாழாமல் மாணவர் முன்னேற வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தங்களை ஏணியாகப் பாவித்து மாணவர்களின் கல்வியில் தேர்ச்சி அடைய பாடுபடுபவர்கள் ஆசிரியர்கள்.

தங்களை மெழுகுவர்த்தியாக எரித்து மாணவர்களின் அறியாமை என்னும் இருளை அகற்றி அறிவு என்னும் ஒளியை ஏற்றிவைப்பவர்கள் ஆசிரியர்கள். தங்கள் பிள்ளைகள் கல்வியில் முன்னேறாவிட்டாலும் பிறர் பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கண்டுகளிப்படைபவர் ஆசிரியர்.

எனவே தான் இன்று ஆசிரியர்களின் சேவை மனப்பான்மையை மாணவரும் பெற்றோரும் மற்றோரும் போற்றிப் புகழக் கடமைப் பட்டுள்ளார்கள்.

எனவே எமக்கு எழுத்தறிவித்த ஆசிரியர்களை தெய்வமாகக் கருதி அவர்களை வாழ்த்தி அவர்கள் எல்லா நன்மைகளும் பெற்று பல்லாண்டு வாழ மாணவர்கள் சார்பில் வாழ்த்துகிறோம். ★

## பண்டிதருக்கு பாராட்டு

பண்டிதர் தி பொன்னம்பலவாணர் எழுதிய காசி கண்ட உரையைப் பாராட்டி அவருக்கு இந்து கலாசார அமைச்சுசான்றிதழும்ரூ5,000 அன்பளிப்பும்வழங்கியுள்ளது.

'நூலாசிரியரின்சேவையைப் பாராட்டும் நிகழ்வு ஒன்று சிவத்திரு சு. சுந்தரராசக் குருக்கள் இல்லத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்குவலி.மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்துகலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட பாராட்டுப்பத்திரமும் அன்பளிப்புத் தொகையும் நூல் வெளியீட்டாளர்களால் பண்டிதரிடம் கையளிக்கப்படும். [க-28]

## பல்கலைக்கு கணனிகள்

யாழ். பல்கலைக் கழகத்துக்கென ஒரு தொகுதி கணனிகள் அண்மையில் பருத்தித் துறைக்கு வந்த மாகோ கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இம்முறை எடுத்துவரப்பட்ட கணனிகள் மூலம் யாழ். பல்கலைக்கழகத்தில் கணனித் தேவைக்கு ஏற்பட்ட பற்றாக்குறை பெருமளவில் குறையும் என யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-9)

## பெண்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 6

கசிப்பு விற்பனை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட இரு பெண்கள் நேற்று முன்தினம் யாழ். நீதி மன்றத்தில் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திருமதி தவராசா பரமேஸ்வரி, அருட்செல்வன் கமலா ஆகிய இருவருமே மேற்படி குற்றச் சாட்டின்பேரில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

இரு பெண்களும் 16 ஆயிரத்து 750 ரூபா தண்டப்பணமாக கட்ட வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார். (இ-5)

## நாளை

புரட்டாதி 20

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

பிற்பகல்: 4 55வரை.

நட்சத்திரம்: பூரம்

மாலை 7.01 வரை.

சுபநேரம்: 7.32 – 9.02

ராகுகாலம்: 1.32 – 3.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தொண்டுதான் உண்மை அன்பைக் குறிக்கும்; வாய்ச் சொல் அல்ல.

– மகாத்மாகாந்தி

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

புன்னாலைக்கட்டுவன், ஒக். 6

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

பெற்றோர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். [க-133]

★ ★ ★

உரும்பிராய். சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இன்று ஆசிரியர் தின விழா கொண்டாடப்படவுள்ளது.

மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பழையமாணவர் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து இந்த விழாவை நடத்தவுள்ளனர். [க – 72]

★ ★ ★

யாழ். இந்துக் கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து இன்று ஆசிரியர் தின விழாவைச் சிறப்பாக நடத்தவுள்ளன,

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர், அத்துடன் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (க-135)

★ ★ ★

சங்கானைக் கல்விக் கோட்டஆசிரியர்தினம்இன்று புதன்கிழமை பகல் இரண்டு மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதமவிருந்தினராக பிரதேச செயலாளர் கா. சந்திரராசாவும் சிறப்பு விருந்தினராக க. குணேந்திரதாசனும் கலந்து கொள்ளவுள்ளனர். [க-28]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரிஆசிரியர் தினவிழாஇன்று 6 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பாடசாலை மாணவர்களும், பழைய மாணவரும் கூட்டாகமேற்கொள்ளும் இந் நிகழ்வில் ஆசிரிய வாண்மை பற்றிய பேச்சுக்கள், கவிதைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறவுள்ளன. (ம)

★ ★ ★

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உலக ஆசிரியர் தினம் இன்று புதன் கிழமை கொண்டாடப்படவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் பருத்தித்துறை நீதிபதி ஆர். ரி. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (க – 111)

★ ★ ★

பருத்தித்துறை, ஒக். 6

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் தினம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கோட்டக் கல்வி அதிகாரி மு. ஸ்ரீபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இதுவரை காலமும் குறைந்தளவு லீவு, எடுத்த ஆசிரியர்களையும் பாடக்குறிப்பு மற்றும் பாடப்பதிவினைப் பேணிய ஆசிரியர்களையும் கௌரவித்து அவர்களுக்கு பரிசில்களும் வழங்கபபடவுள்ளன.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலை ஆசிரியர்களை இந்த நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [க – 118]

★ ★ ★

பருத்தித்துறை, ஒக். 6

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆசிரியர் தினம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வடமராட்சிப் பகுதியில் இளைப்பாறிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இளைப்பாறிய ஆசிரியர்கள் அதிபர்களை தவறாது இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-118)

★ ★ ★

நெல்லியடி, ஒக். 6

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு, பருத்தித்துறை பிரதேச சபையின் பிரதம நூலகர் எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக பருத்தித்துறை, மல்லாகம் மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா கலந்து கொள்வார். (க-109)

## நீவிர் நெடுநாள் நீடூழி வாழ்க!

அன்னை இன்மடியில் அரவணைப்பில் இருந்துநாம்
ஆறு ஆம் வயதினில் ஆசிரியர் இடம்வந்து
இன்பம் உடன்இணைந்து இயலிசை கற்று
ஈனச்செயலதில் ஈடுபடாது தடுத்து
உயர்ந்த உள்ளத்துடன் எம்மையுயர்த்தி
ஊதியம் பாராது எமக்கு
எண்ணெழுத்து அறிவித்த எமதன்பு ஆசிரியரே!


ஏணிபோல் நின்றெம்மை மேலே ஏற்றி
ஐயமின்றி வளர ஐயுறவகற்றி
ஒன்றுபட்டு ஒருமித்து வாழக் காட்டி
ஓசைநயத்துடன் ஓதுவித்து
ஔவியம் பேசாதுவைத்த எமதன்பு ஆசிரியரே!!

கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
காட்டியவன்பால் காளையர்நாம்
நும்தொண்டு நுரைபோல் அழியாது
நூறாண்டுகாலம் நூறாயிரம் மாணவர்தம்
நெடுநாள் கல்வி பெற நெற்றிக்கண்ணன் அருளினால்
நீவிர் நெடுநாள் நீடூழி வாழ நாம்
பணிந்து உ[illegible]
பாரார் புகழ [illegible]

க. தர்மேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்
## (1974 -
## வெள்ளிவிழாச்



## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

அன்புசால் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெள்ளிவிழா காண்பதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றோம். இந்நாட்டின் கல்விவளர்ச்சிக்கு தன்னிகரில்லா பணியாற்றும் பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெருமைக்கும் சிறப்புக்கும் உரியதாகும். இந்நாட்டில் 25 வருடங்கள் கல்விக்கென பணியாற்றிய பெருமை இப்பல்கலைக்கழகத்தையே சாரும். யாழ்ப்பாணத்திற்கு வளம் கல்வி; கல்வியை வளர்க்க வேண்டுமென அன்றுதொட்டு இன்றுவரை உழைத்தவர்கள் பலர். அவ்வரிசையில் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் கண்ட கனவு இன்று நனவாகி உள்ளமை அவரது அறப்பணிக்கு மகுடமாகும். பரமேஸ்வராக் கல்லூரியாக ஆரம்பித்து இன்று பல்கலைக்கழகமாக தலைநிமிர்ந்துநிற்பது தருமத்திற்கு எடுத்துக்காட்டாகும். பல இடர்பாடுகளின் மத்தியிலும் தனது பணியை சோரவிடாது செயல்படுத்தியமை பாராட்டுக்குரியதாகும். இப்பணிக்கு உழைத்த துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள் பாராட்டக்குரியவர்கள். இன்று இப்பல்கலைக்கழகம் மக்களுக்கு வேண்டிய அறிவுசார்ந்த பல்வேறு துறைகளில் தன்னை அர்ப்பணித்திருப்பது பாராட்டுக்குரியதாகும். வெள்ளிவிழாவைப் போன்று ஏனைய விழாக்களையும் கண்டு மக்களுக்கு தொண்டாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று பட்டமளிப்பு நிகழ்வை சிறப்பிக்கும் யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழிநுட்ப அலுவலர் ஒன்றியத்தினரை இறைவன் ஆசீர்வதிப்பானாக.

**வாழ்க பல்கலைக்கழகம்! வளர்க இதன் பணி!!**
**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்.**
**குருமஹா சந்நிதானம்**



## யாழ்.ஆயர் அருளாசி

யாழ். பல்கலைக்கழகம் வெள்ளி விழாவினைக் காணும் மகிழ்ச்சிகரமான இவ்வேளையில் எனது வாழ்த்துக்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக ஆரம்பித்து தனித்துவமிக்க யாழ்.பல்கலைக்கழகமாக வளர்ச்சி கண்டுள்ளதும் தனிச்சிறப்பே. உயர்கல்விக்கான அம்சக்கூறுகள் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட போதிலும் மேற்கத்தைய உயர்கல்விப் பாரம்பரியத்தை எமது மண்ணில் அமெரிக்கமிஷன் அறிமுகம் செய்தது. இப்பாரம்பரியத்தின் பின்னணியில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் சிறியவழியில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வளர்ச்சி கண்டுள்ளதை கண்டு பெருமிதம் அடைகின்றோம்.

பல்கலைக்கழகங்கள் ஒரு சமூகத்தினதும் அதன் மொழியின் எழுச்சியையும் பரந்துபட்ட வளர்ச்சியையும் வரலாற்றில்பதிக்கும் ஒரு சமூகத்தின் தலைமைத்துவத்தையும் அதன் வரலாற்றுச் செல்நெறியையும் புதிய சிந்தனை ஊற்றையும் நிர்ணயிக்கும் என்பது மானிட வரலாறு எமக்குத் தரும் பாடமாகும். 21 ஆம் நூற்றாண்டுக்குள் காலடி வைக்கின்ற எமது மக்களின் வரலாற்று ஓட்டத்தில் புதிய செல்நெறியையும் புதிய பரிமாணமிக்க ஆய்வுகளையும், சமூகத்தின் வளர்ச்சிக்கான பங்களிப்பையும் யாழ்.பல்கலைக்கழகம் வழங்கவேண்டும். போர் அவலங்களினால் சிதைந்துபோன சமூகத்தையும் அழிக்கப்பட்ட வளங்களையும் கட்டி எழுப்பிடுதல் யாழ். பல்கலைக்கழகத்தின் மேலுள்ள வரலாற்றுக் கடமையாகும்.

யாழ். பல்கலைக்கழகம் வளர எனது வாழ்த்துக்கள்.

**இறைபணியில்**
**பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர்



## துணைவேந்தரின் ஆசி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாவை ஒட்டி பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம் வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் பெரும்பணி புரிந்துள்ளார்கள்.

கடந்த 25 வருடங்கள் யாழ்ப்பாணப்பகுதியில் சுமுகநிலை நிலவவில்லை. இத்தகைய பல இடர்கள் மத்தியில் பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்குகின்ற தென்றால் இதற்குப் பல்கலைக்கழக சமூகம் ஒத்துமட்டாக வழங்கிய - ஆதரவே காரணம். 1987 இலும் 1995-96 காலப்பகுதியிலும் ஏற்பட்ட பாரிய பாதிப்புக்களை பல்கலைக்கழக சமூகம் தங்கள் கடின உழைப்பால் நிவர்த்திசெய்து பல்கலைக்கழகத்தை மேலும் மெருகூட்டியது.

1974 இல் சிறு வளாகமாக ஆரம்பித்த இப்பல்கலைக்கழகம் இன்று வவுனியா வளாகத்தை தன்னுள் கொண்டும், எட்டுபீடங்கள் கொண்ட பெரிய பல்கலைக்கழகமாக வளர்ந்துள்ளது. மேலும் புதிய பீடங்கள் அமையவிருக்கின்றன. இன்று 4ஆயிரம் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். கல்வி, கல்வி சாராபிரிவுகளில் ஆயிரம் பேருக்கு மேல் கடமை புரிகின்றனர்.

இப்பல்கலைக்கழகம் 21ஆம் நூற்றாண்டில் மிக வேகமாக வளரும் என்பது திண்ணம். இதன்வளர்ச்சி முன்னர்போல இன்றுபோல வருங்காலத்திலும் சிறப்பாக அமைவதற்கு ஊழியர்கள் சிறப்பாக கடமையாற்றி இதன் வளர்ச்சி வேகப்படுத்தப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

**- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.** துணைவேந்தர்.



## யாழ்.அரச அதிபர் வாழ்த்து

எமது யாழ்ப்பாணத்தின் அரும்பெரும் சொத்து கல்வியே. இக்கல்விச் சேவைக்கு காலாதிகாலமாக பல துறையினர் பெரும் சேவையாற்றினர். கடந்த 25 வருடங்களாக யாழ். பல்கலைக்கழகம் கல்வித்துறைக்கு ஆற்றிவரும் தொண்டு அளவிடற்கரியது. பல்வேறு துறைகளில் ஆற்றல் மிக்கவர்களால் மருத்துவம், கலை, வணிகவியல், விவசாயம், கணிதவியல், முகாமைத்துவம் போன்ற பகுதிகளில் சாதனைகள் புரியப்பட்டுள்ளன. இவை எல்லாம் நாம்பெருமைப்படக்கூடிய விடயங்களே. யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விமான்களுடன் நிர்வாகத்துறையினரும் திறம்பட செயலாற்றி வருகின்றமை கண்கூடாகும். இத்துறையிலே சேவையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் பாராட்டப்படக்கூடியவர்களே. ஒவ்வொருவரும் தமது பொறுப்பை உணர்ந்து திறம்படச் செயற்பட்டுவருவதை நான் அறிவேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியத்தால் வெளியிடப்படும் வெள்ளி விழாச் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**க.சண்முகநாதன்,**
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.



## பதிவாளரின் வாழ்த்து

தமிழ் மக்களது நீண்ட காலக் கல்வித் தேவையையும் அபிலாஷைகளையும் முன்னெடுத்துச் செல்லும் உயர் கல்விப்பீடமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது இருபத்தைந்தாவது வருடத் தளராத சேவையைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழா ஆண்டில் காலடி எடுத்துவைத்துள்ளது. இந்த நாளை நினைவுகூரும் வகையில் யாழ்பாணப் பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம் ஒரு சிறப்பு மலரினை வெளியிட முன்வந்துள்ளமை மிகவும் நன்றியுடன் பாராட்டப்படவேண்டிய ஒரு செயற்பாடாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் இந்த ஒன்றியம் கடந்த பத்து வருடங்களாக ஆற்றிவரும் பணி அளப்பரியது எனக்கருதுகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் பாரிய கல்விப்பணிகளை தொடர்ந்து ஆற்றுவதற்கு இந்த ஒன்றியத்தின் இச்செயற்பாடுகள் ஊக்கம் தருகின்றது.

**கலாநிதி க.குணராசா,**
பதிவாளர்.



## மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் செயற்பட்டுவரும் எழுதுவினைஞர், தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம் பல்கலைக்கழக வெள்ளிவிழாவோடு தொடர்பாக வெளிவரவிருக்கும் சிறப்புமலரை மேலும்மெருகூட்ட விழைந்திருப்பது மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். பட்டதாரி மாணவர்களுக்கான பட்டமளிப்புவிழா இன்று 06.10.99இல் நடைபெறும்போது சிறப்புமலர் 'உதயன்' நாளிதழில் மலரவிருப்பது இன்னும் சிறப்பினை அளிக்கிறது.

பல்கலைக்கழக அலுவல்கள் யாவும் விரைவாகவும் சிறப்பாகவும் நடைபெறவும் மாணவர்களது விடயங்கள் யாவும் உடனுக்குடன் கவனிக்கப்படுவதற்கு எழுதுவினைஞர்கள் பெரும் பங்களிப்பினை வழங்கிவருகின்றனர். கடந்த பலவருடங்களாக எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம் ஆற்றிவரும்பணி மிகப்பாராட்டப்படவேண்டியதே ஆகும். சிறப்பு மலர் பல விடயங்களைத் தாங்கி வெளிவருவது பல்கலைக்கழக உலகிற்கு ஒரு சிறந்த உந்துசக்தியாக அமைகின்றது. பல்வேறு கற்கை நெறிகளையும் பயிற்சிகளையும் வழங்கிவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் பலவற்றை கொண்டாடிவருகின்றது. உடற்கல்வி மாணவர்மன்றத்தால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளையும் எம்மால் கண்கூடாக காணமுடிந்தது.

பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியத்தினர் பல்கலைக்கழக வளர்ச்சியினை தங்கள் சிறப்பான பங்களிப்பினை செய்துவருவது மட்டுமல்லாது பட்டமளிப்பு விழாவன்று வெளிவரும் சிறப்புமலரிலும் தங்கள் ஒன்றியம் சார்பாக நல்ல விடயங்களை சொல்வதற்கு விழைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சிஅடைவதோடு நல்வாழ்த்துக் கூறுகின்றேன்.

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்,வடக்கு-கிழக்கு மாகாணக்
கல்வி அமைச்சு.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி

இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு உழைத்த பெருமக்களில் அதி முக்கியமானவர் சேர் பொன். அருணாசலம் அவர்கள். 1906 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கத்துக்குத் தலைமைதாங்கிய சேர் பொன்.அருணாசலம் அவர்களது அயராத உழைப்பினால் 1921 இல் இலண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்த இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பமானது. இதனால் சேர் பொன் அருணாசலம் அவர்களை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தந்தை என்று அழைத்தார்கள்.

"திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்" என்பது சேர் பொன். இராமநாதன் அவர்களது தாரகமந்திரம். திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரியையும், சுன்னாகம் இராமநாதன் கல்லூரியையும் இராமநாதவள்ளல் அமைத்தார். பரமேசுவரக் கல்லூரி பல்கலைக்கழகமாயிற்று. இராமநாதன் கல்லூரி வளவில் யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவு இயங்குகிறது.

06.10.1974 இல் அப்பொழுது பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவினால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இன்று வெள்ளி விழாவைக் காணுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிப் பாதையில் தலைமை தாங்கியவர்கள் செய்தபணி என்றும் பாராட்டத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் யாழ். வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதன் தலைவராக இருந்தவர் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரைத்தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகப் பதவியை ஏற்றுக் கொண்டவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் அ.துரைராசா அவர்களும் பின்னர் பேராசிரியர் க.குணரத்தினம் அவர்களும் துணைவேந்தர்களாகப் பதவியேற்று வியத்தகு சேவையினை வழங்கினார்கள். இப்பொழுது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், பல்கலைக்கழக வளர்ச்சியின் பொருட்டு அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்றார்கள்.

1978 இல் மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் இயங்கி வந்த விஞ்ஞானபீடம் 1978 இல் தற்போதைய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. 1990 இல் விவசாய பீடமும் 1999 இல் முகாமைத்துவ கற்கை பீடமும் உயர்பட்டப்படிப்புகள் பீடமும் உருவாக்கப்பட்டுள்ளன. துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்கலைக் கழக வளர்ச்சியின் பொருட்டு ஆற்றிவரும் சேவையோ மிகமிக உயர்ந்தது.

வெளிவாரிப் பட்டபடிப்புகள் கற்கைநெறி, தொழிலாளர் கற்கைநெறிப்பிரிவு புறநிலைக்கற்கைகள் அலகு என்பன ஆரம்பிக்கப்பட்டதால் பல்கலைக்கழகத்தின் அந்தஸ்து மேலும் உயர்ந்தது.

பல்கலைக்கழகம் ஆரம்பமான பின்னர் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பெரும் குந்தகத்தை இரு பாதிப்புக்கள் ஏற்படுத்திவிட்டன என்றே கூறலாம்.

1987 இல் இந்திய அமைதிப்படையினர் வருகையால் பல்கலைக்கழ கத்துக்குப் பலவித பாதிப்புக்கள் ஏற்பட்டன. 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு பல்கலைக்கழக வளர்ச்சியை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. இரு பாதிப்புகளினாலும் எங்கள் பல்க்கலைகழகத்துக்கு உண்டான பொருள் நட்டமும் மிகமிக அதிகம். யுத்தத்தினால் கடமையில் இருக்கும் பொழுதே சில ஊழியர்கள் கொல்லப்பட்டனர்: சிலர் கைது செய்யப்பட்டார்கள்: இவ்வளவு தூரம் பாரிய நட்டம் ஏற்பட்ட பொழுதிலும் பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவரும் இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு சலியாது உழைத்தார்கள், முன்னேற்றம் காண முயற்சி செய்தார்கள்.

இவ்வளவு பிரச்சினைகள் இருந்த பொழுதிலும் தொழில் வழிகாட்டி மையம், பணியாளர் அபிவிருத்தி மையம், பழைய மாணவர் சங்கம் முதலான அமைப்புக்களை இங்கு ஏற்படுத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயங்களாகும். இதனால் பல்கலைக்கழகத்துக்கும், சமூகத்துக்கும் நல்ல தொடர்பு ஏற்படுத்துவதற்கு வழிதிறக்கப்பட்டுள்ளது. தமிழ்பேசும் மாணவர்கள் அதிக பணச்செலவு இன்றி இங்கேயே பல்கலைக்கழகக் கல்வியைப் பெறக் கிடைத்த வாய்ப்பு மிகவும் மெச்சத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வடக்கே வாழும் மக்களுக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாம். சகல விழுமியங்களுடனும் கூடிய யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வெள்ளி விழாக்காணும் நிலையில் நிமிர்ந்து நிற்கின்றது.

பல்கலைக்கழக எழுதுவினைஞர்கள்; தொழில்நுட்ப அலுவல்கள்; இதர ஊழியர்களை உள்ளடக்கிய பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில் நுட்பஅலுவலர் ஒன்றியம், வெள்ளிவிழாக் காணும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உன்னத வளர்ச்சி கண்டு களிபேருவகை கொள்ளுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாழ்க! வளர்க!!


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எழுதுவினைஞர்,**
**தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்.**

மலருக்கு உரம் தந்தவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியத்தின் நன்றிகள்.

ஈ.எஸ்.பேரம்பலம் & சன்ஸ் யாழ்ப்பாணம்.
நியூ கமால் செரமிக் யாழ்ப்பாணம்.
சுந்தர்ஸன் மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல்கலைக்கழகம் (... – 1999) சிறப்பு மலர்






## துர்க்காதுரந்தரியின் அருளாசி

கல்வி நிலையங்களின் உயர்பீடமாக விளங்குவது பல்கலைக்கழகமாகும். யாழ். மண் செய்த தவப்பயனாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட கலைக்கோயில் இதுவாகும். அன்றைய தினம் நடைபெற்ற பல்கலைக்கழக திறப்பு விழாவிலே பங்குபற்றி உரையாற்றிய பேறு எனக்கும் உண்டு. சுவாமி தனிநாயகம் அடிகளார், மாட்சிமை தங்கிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார், முன்னாள் கல்வி மந்திரி பதியுதீன் முகமது ஆகியோரின் மகாசபையிலே அடியேனுக்கும் ஓர் இடம் கிடைத்தது. எங்கள் மண்ணில் இடம்பெற்ற எழுச்சிமிக்கப் பெருவிழா இதுவாகும். பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு என்றும் மறப்பதற்கில்லை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்ற தமிழ்ப் பேரறிஞர்களால் அணிசெய்யப்பட்ட இந்தவிழாவை முன்னிட்டு இன்று இருபத்தைந்துஆண்டுகள் நிறைவு பெற்ற வெள்ளிவிழா நிகழ்வுகளிலும் பங்குபற்றும் பாக்கியம் பெற்றுள்ளேன். யாழ்.பல்கலைக்கழகம் மேலும்மேலும் நற்பணியாற்றி தமிழர் பண்பாடு, கலாசாரம், அறிவுடைமை, இறைநம்பிக்கை என்பனவற்றில் மேலோங்கி நிற்கவேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

துர்க்காதுரந்தரி **கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி** *(சமாதான நீதிபதி,)*
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

## உளமார வாழ்த்துகிறது உதயன்

யாழ்ப்பாணத்தின் உயர் கல்விப் பீடமாக விளங்குவது யாழ். பல்கலைக் கழகம். அது தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடும் இந்த நன்னாளில் மக்களுடன் சேர்ந்து உதயன் நிறுவனமும் அதனை உளமார வாழ்த்துகிறது.

ஆரம்பத்திலேயே தமிழர்களுக்கான பல்கலைக்கழகம் அங்கா, இங்கா என்ற பிரச்சினையின் மத்தியில் ஒரு வளாகமாகப் பிறந்து, இன்று பெரும் கல்விக்கோபுரமாக - கல்விக் கோயிலாக - அது உயர்ந்து நிற்பது எங்கள் எல்லோரையுமே இறும்பூ தெய்த வைக்கிறது.

தொடர்ந்து இயங்குமா, இயங்காதா; வசதிகள் உண்டா, வளங்கள் இல்லையே; என்று பல கண்டங்களைத் தாண்டி அது ஓங்கி வளர்ந்து நிற்பது யாழ்ப்பாண மக்களின் பெரும் பாக்கியம். அதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த உழைக்கின்ற உயர் கல்விப்புலத்தோருக்கு மக்களின் நன்றி என்றென்றும் உண்டு.

கடந்த இரண்டரை தசாப்தங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஏனையவற்றின் தரத்துக்கு இணையாக உயர்ந்து நின்று, தனதென்று ஓர் உயர்கல்விச் சமூகத்தை உருவாக்கி இருப்பது எல்லோர்க்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

பல்கலைக்கழகம் மக்களிடம் இருந்து தூரவிலகி நிற்கிறது என்ற குறையும் ஓரளவு நீக்கப்பட்டு வருகிறது. எனினும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பின் இலக்கு எங்கள் மண்ணின் வளங்களைக் கண்டறிந்து, ஆராய்ந்து எங்கள் மக்களின் சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்த உதவுவதில் நாட்டம் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று அமைந்துள்ள முந்திய பரமேஸ்வராக் கல்லூரி, இந்தப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்கிய சிறப்புக்கு உரியது. எங்கள் பாரம்பரிய சமய, மொழி, கலாசாரங்களை வளர்க்கும் உயரிய நோக்கோடு நிறுவப்பட்டது. அந்த நோக்கத்தை நிறைவேற்ற யாழ். பல்கலைக்கழகம் அயர்ந்தும் மறந்து விடலாகாது.

அனைத்து உலகமும் புத்தாயிரம் சகாப்தத்தை புதிய சிந்தனைகளோடும் புதிய முயற்சிகளோடும் புதுவகை உழைப்போடும் ஒளிமயமான காலமாக நோக்குகின்றன. எங்கள் பிரதேச உயர் கல்வியிலும் எங்கள் இளம் சமுதாயத்துக்கு பிரகாசம் அளிக்க எல்லோருமாகச் சேர்ந்து உழைப்போமாக! உயர்வு பெறுவோமாக!

**உதயன் வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.** **ஈ.சரவணபவன்.** நிர்வாக இயக்குநர்.



## எமக்கு நம்பிக்கை தரும் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது ஆண்டு விழாவில் உதயன் - சஞ்சீவி குடும்பம் பங்கு கொள்வது நிறைவான மகிழ்ச்சி தரும் உறவு ஆகும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தோற்றம், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல், சமூக, கலாசார வரலாற்றில் மகத்துவமான நிகழ்வு எனக் குறிக்கப்படும். அது தற்செயலாக ஏற்பட்டது அல்ல. தமிழ் மக்களின் மனங்களில் மிகவும் ஆழமாக உதித்த எண்ணங்கள், அபிலாசைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் வெளித்தோன்றல்தான் நமது பல்கலைக்கழகம். அதனாலேதான் அதன் யௌவன காலமாகிய கடந்த 10 - 15 வருடங்களில், பல அனர்த்தங்கள், பாரிய இழப்புக்கள், அகதி நிலைப்பாடு ஆகியவற்றை அனுபவித்தும், அது வெறுமனே நிலைப்பது மட்டுமல்ல, புதிய ஊக்கத்துடனும் உத்வேகத்துடனும் மறுவாழ்வை நோக்க முடிகிறது.

1983 ஆம் வருடத்தின் பின் தமிழ் மக்களின் உயர் கல்வி எதிர்பார்ப்புகள் பொடியாகிவிடாது காப்பாற்றியது யாழ். பல்கலைக்கழகம்தான். நமது கலைப் பீடத்தின் பங்களிப்பு தமிழ் மொழி மூலம் கல்விக்கும் ஆய்வுகளுக்கும் உறுதியாக அமைந்தது. முதுமாணி நிலை ஆய்வுகள், குறிப்பாக கல்வியியல், தமிழ், பொருளாதாரவியல், புவியியல் துறைகளில் நமது பிரதேச அடிப்படையில் அதன் தேவைகளுக்கு ஏற்றதாக அமைந்தன.

நமது விஞ்ஞான பீடம் உருவாக்கிய மாணவர்கள் உலகளாவிய பரவலில், பௌதிகம், இரசாயனம், கணிதம் சார்ந்த துறைகளில் உயர் நிலைகளை வகிக்கின்றனர்.

பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் எமக்குக் கிடைத்த மிகவும் பலமான சமூக ஸ்தாபனம் ஆகும். ஒரு சில அபூர்வமான ஆசிரியர்களும், யாழ் வைத்தியசாலை மருத்துவர்களும், கிடைத்த வாய்ப்பை பக்தியுடன் பயன்படுத்தி இதுவரை 825 டொக்டர்களை உருவாக்கியது ஒரு சாதனை ஆகும். தற்போது 518 மாணவர்கள் பயில்கின்றனர். எமது பழைய மாணவர்கள், புதிய 21 ஆம் நூற்றாண்டில், மருத்துவ பீடத்தின் ஆசிரிய குழுவில் சேருவார்கள் என்ற நம்பிக்கையுடன், இம்மாதம் வர இருக்கும் 21 ஆம் அணி மாணவர்களை வரவேற்கின்றோம்.

பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம் நமது நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கு வழி வகுக்க வேண்டும். கடற்றொழிலியல் எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் பொருளாதார உயர்வுக்கும் ஆக்கம் தரவல்லது என்ற சிந்தனை வலுப்பெற்றுள்ளது. அதன் விஞ்ஞான பூர்வமான நவீன வளர்ச்சியில் எமது வரும் காலத்தின் செல்வச் செழிப்பு அதிகம் தங்கியுள்ளது.

அரசியலின் போக்கையே நிருணயிக்கவல்ல, மாபெரும் சக்தி வாய்ந்த எமது பல்கலைக்கழகத்தின் வாழ்விற்கும் வளத்திற்கும் எமது மக்களின் ஆசியும் ஆதரவும் ஆலோசனைகளும் தேவையாகும். நாம் கடந்த காலங்களை அதிசயத்துடன் ஆய்ந்து, எதிர்வரும் நூற்றாண்டை நம்பிக்கையுடன் நோக்கும் இவ்வேளையில் மக்களின் ஆத்ம ஓசையாக எமக்கு உறுதுணையாக நின்ற உதயன் - சஞ்சீவி இரட்டையருக்கு அன்புடன் நன்றி செலுத்துவது எமது கடமை ஆகும்.

1985 துன்பமான வருடங்களில் ஒன்று. போரும் பீதியும் கொடுமையாக இருந்த காலம். அப்போது, 27.11.85 இல் உதவும் கைகள் போல் உதயன் உதித்தது ஞாபகம். 'உதயன் புதினம் சொல்ல வரும் புதியவன்.... உங்கள்பால் அன்பு கொண்டவன்' என்ற குரலுடன் வந்த உதயன், எமது பல்கலைக்கழகத்துடன் கொண்ட தொடர்புபோல் உலகில் வேறு எங்கும் பல்கலைக்கழக - பத்திரிகை உறவைக் காணமுடியுமோ, ஐயம்தான். பல்கலைக்கழக அறிஞரின் எண்ணங்களைத் தாங்காத உதயன் நாளிதழ்கள் அரிது என்றே கூறமுடியும். பல்கலைக்கழகச் சம்பவங்களை நடுநிலையில் நின்று மக்களுக்குக் கூறிய உதயனின் சேவை பத்திரிகா தர்மத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

பல்கலைக்கழகம் தனது பெருமையான விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் உதயன் - சஞ்சீவி அதனைப் பாராட்டுவது எதிர்பார்த்த அன்புதான்.

**பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)**

சிறுவர் குதூகலிக்க
மீண்டும் வருகிறான் அர்ச்சுனா.
புதுமெருகுடன் உங்கள் கைகளில் அவன்
விரைவில்....... காத்திருங்கள்!

அர்ச்சுனா



## யாழ். பேராயர் அருளாசி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எழுதுவினைஞர்; தொழிநுட்ப அலுவலர் ஒன்றியம் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு ஒரு சிறப்பு மலரை வெளியிடவிருப்பது மிகுந்த மகிழச்சியைத் தருகின்றது. ஒரு பெரும்பாலம் அமெரிக்காவில் கட்டப்பட்டபோது ஓர் உளவியலாளர் அங்கிருந்த ஊழியர்களைப் பார்த்து என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். சிலர் நாம் எங்களுக்கு சம்பளம் தருகின்றனர் வேலை செய்கின்றோம் என்றனர். இன்னும் சிலர் "இந்தவேலைதான் நமக்கு அகப்பட்டது" என்றனர். வேறு சிலரோ 'நாம் அமெரிக்காவின் மிகச்சிறந்த பாலத்தை கட்டி முடிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றோம்' என்றனர்.

நமது பல்கலைக்கழக எழுதுவினைஞர்களும் தொழில்நுட்ப அலுவலர்களும் இந்த உணர்வுடன் அதாவது வடக்கில் ஒரு சிறந்த பல்கலைக்கழகத்தினை கட்டியெழுப்புகின்றோம் என்ற உணர்வுடன் பணியாற்றுகின்றனர் என்பதற்கு இந்த மலரே சான்று.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பலவித சிரமங்கள் மத்தியில் தமது படிப்பைத் தொடருகின்றனர். அவர்களின் முன்னேற்றமே நம் ஒவ்வொருவரினதும் கரிசனை ஆகும்.

நமது எழுது வினைஞர்களும் தொழிநுட்ப அலுவலர்களும் சிரமத்தை பொருட்படுத்தாது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக தம்மை அர்ப்பணித்திருப்பது நமது வருங்காலத்தை குறித்த நம்பிக்கையைத் தருகின்றது.

யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர்களையும் தொழில்நுட்ப அலுவலர்களையும் இதர ஊழியர்களையும் வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

**எஸ்.ஜெபநேசன்,**
பேராயர்,
தென்னிந்தியச் திருச்சபை,

## யாழ்.நீதிபதி வாழ்த்து



இற்றைக்கு இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கழகம் வெள்ளிவிழாக் காணும் சேதி மகிழ்ச்சிதருகின்றது. இம் மண்ணின் கல்விமான்கள், அறிஞர் பெருமக்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அயராத முயற்சியினால், உழைப்பினால் உருவான யாழ். பல்கலைக்கழகம், கடந்த இருபத்தைந்து ஆண்டு காலப்பகுதியில் நினைத்துப்பார்க்கமுடியாத துன்பச் சூழ்நிலையில், கல்வி உலகில் யாவரும் பெருமைப்படக்கூடிய விதத்தில் சாதனை புரிந்துள்ளது. தன்னகத்தே கொண்ட பலதுறைகளிலும் சிறந்த அறிஞர்களை உருவாக்கியுள்ளது. இயங்காமலேயே போய்விடுமோ என்று பதைபதைத்த கால கட்டங்களில் எல்லாம், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் ஆகியோரின் சிறப்பான பணியினால் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தலைநிமிர்ந்து நிற்பது, அது காலம் காலமாக தன் பெருமையில் இம்மியும் குறையாது நிலை நிற்கும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழகஅன்னை உருவாக்கிய பல்துறை அறிஞர்கள் நாடெங்கும், ஏன் உலகெங்கும் தத்தம் துறைகளில் சிறந்து விளங்குவது, பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்க்கும் சேதி.

யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது பணிபுரியும் துணைவேந்தர், பேராசிரியர்கள் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் புதுப்புதுத் துறைகளை அறிமுகப்படுத்தி கல்வித்துறையில் உயரிய சாதனைகளைப் புரியவேண்டும் என்ற தூய சிந்தனையுடன் பணிபுரிகின்றார்கள். அவர்கள் எண்ணம் நிறைவேற நல்லூர் முருகன் துணை நிற்பான்.

உலகெல்லாம் மனித நேயமும், மனித விழுமியங்களும் அருகித் தொலைந்து போய்க்கொண்டிருக்கின்ற, வேதனை மிகுந்த இக்கால கட்டத்தில், யாழ். பல்கலைக்கழகம் இவை தொடர்பில் கருத்தைச் செலுத்திச் செயற்பட வேண்டும். வெறும் காகிதப் பட்டங்கள் பெற்றவர்களாக பட்டதாரிகள் இருக்காது, தாம் பெறும் அறிவும், பாடமும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் அமையவேண்டும். அதுவே பல்கலைக்கழகங்களின் வெற்றி. யாழ். பல்கலைக்கழகம் இந்தவகையில் வெற்றிக் கொடி நாட்டட்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா மிகச் சிறப்புற நடைபெறவும் கல்வித்துறையில் யாழ். பல்கலைக்கழகத்தின் பெயர் தரணியில் முன்னணியில் நிற்கவும் இதய சுத்தியுடன் வாழ்த்துகின்றேன்.

**எஸ். ஏ. ஈ. ஏகநாதன்,**
மேலதிக மாவட்ட நீதிபதியும்,மேலதிக நீதிவானும்
யாழ்ப்பாணம் / ஊர்காவற்றுறை.



## யாழ்ப்பாண வரலாற்றில் பெரும் சாதனை

பல்கலைக்கழகம் ஒன்றிற்கு 25 வருடங்கள் என்பது மிகக்குறுகிய கால அளவுதான். ஆனால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அதன் முதல் 25 வருடங்களும் மிக முக்கியமானதாக, பிரச்சினைகள் பல நிறைந்தவையாக இருந்தன. முதலில் வளாகமாகவும், பின்னர் 1979 முதல் பூரண்மான பல்கலைக்கழகமாகவும் இயங்கி வந்துள்ள இந்நிறுவனம் முதலில் தன்னை உண்மையான புலமைத் தளமாக நிறுவ வேண்டியிருந்தது. பின்னர் 1983 - 84இலிருந்து தன்னைத் தானே மூடிவிடக்கூடாத ஒரு சவாலுடன் தொழிற்பட்டது. அது இன்னமும் உண்டு.

இந்தப் பின் புலத்தில் கடந்த 25 வருடங்களைப் பின் நோக்கிப் பார்க்கும் பொழுது பொறுப்பாக இருந்தவர்கள் எல்லோருமே தத்தம் இயல்புகளுக்கு இணங்க இப்பணிகளை நன்கு நிறைவேற்றியுள்ளனர். பேராசிரியர்கள் கைலாசபதி, வித்தியானந்தன், துரைராசா, குணரத்தினம் ஆகியோரும் இப்போது பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையும் மறக்க முடியாச் சேவைகளை ஆற்றியுள்ளனர். (ஆற்றிவருகின்றனர்). பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையின் முயற்சிகள் வெல்க, சிறக்க என வாழ்த்துகிறேன்.

இலங்கையின் ஐந்து பல்கலைக்கழகங்களில் விரிவுரை ஆற்றிய அனுபவம் எனக்கு உண்டு. யாழ். பல்கலைக்கழகத்தைப் போன்று, நிறுவனத்தின் நற்பெயரும் முன்னேற்றமும் என்ற சவாலை,

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பயன் பல நல்கிப் பொலிவுடன் திகழ்க!



சுதந்திரம் பெற்றோம் என்றார். எப்போது என்றால் 1948ல் என்கின்றனர். நாடு சுதந்திரம் பெற்றதாக பெரும்பான்மையினர் பேசிக் கொள்கின்றனர். கொடி ஏற்றி விழாக்கொண்டாடி, விருந்துகள் நடத்தி திருப்தியும் அடைகின்றனர்.

நாமோ பாடப்புத்தகங்களில் இது பற்றி படித்தோமே அன்றி உண்மையில் உணர்வுபூர்வமாக விடுதலை, விடிவு, விமோசனம் என ஆடிப்பாடி இற்றைவரை மகிழ்ந்தோமில்லை.

சுதந்திரத்தின் ஒரு படி கல்வியில் நாடு முழுமையான முன்னேற்றம் காண்பதே என்பதைவிட, முதற்படி அந்த நாட்டின் மொழியின், கலைகளின் பண்பாட்டில் நாகரிக வளர்ச்சியில், விஞ்ஞான, வைத்திய சட்ட சமூகத்துறைகளில், ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதே விடுதலையின் வெளிப்பாடு எனலாம்.

இந்த வகையில் நமது பல்கலை பேணும் கழகமென நாம் பெயர் சூடும் பல்கலைக்கழகம் ஒரு கலங்கரைவிளக்காக, அறிவெனும் ஒளியை வீசி எமக்கெல்லாம் இருள்தனை அகற்றும், கலைக்கூடமாக மிளிரவேண்டும் என்ற பேரவா எம்மை நம்பிக்கை ஊட்ட வைத்தது.

கடந்த கால் நூற்றாண்டில் இந்தப் பல்கலைக்கழகம் பட்டங்கள் பல தந்து, பல நூறு அறிஞர்களை, வைத்திய கலாநிதிகளை, சட்ட விற்பன்னர்களை, விஞ்ஞான பட்டதாரிகளை எம்மத்தியில் நடமாட வைத்த பெருமையை நாம் மறப்பதற்கில்லை. எத்தனையோ பல்வேறு பீடங்களை அமைத்து, அப் பீடங்கள் வாயிலாக பேரறிஞர்களையும் தந்தது உண்மையே. எனினும் -

இப்பல்கலைக்கழகம், உதயசூரியனாக மேலெழுந்து, ஈழத்தைச் சூழ்ந்த காரிருளை கலைத்ததா?

( 15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தி - வரவேற்று மகிழ்கின்றோம்

பல்கலைக் கழகத்தில் நீண்டகாலமாக விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி 01 - 10 - 1999 முதல் கல்வியியற்றுறைத் தலைவராகப் பதவி உயர்வு பெறும்

**பேராசிரியர் க. சின்னத்தம்பி**

அவர்களை

வாழ்த்தி - வரவேற்று - பணிசிறக்க இறைஞ்சி மகிழ்கின்றோம்.

அத்துடன் இவ்வெள்ளிவிழா ஆண்டு தனில் — யாமும் பட்டம்பெற உவந்துழைத்த பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், இடைவரவு விரிவுரையாளர்கள், கல்வியியற்பீட பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

தென்மராட்சிப் பிரதேச கல்வியியற்பீட பகுதிநேர மாணவர்கள் - 1999

[69697]

## முதியோர் தின விழா

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் முதியோர் தின விழா எதிர்வரும் சனிக்கிழமை நாரந்தனை றோ. க. வித்தியாலயத்தில் நடை பெறும்.

உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையின் செயலாளர் பட்டுமாமா உட்பட பலர் உரை நிகழ்த்துவர். இந்த நிகழ்வில் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (க-111)

★ ★ ★

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை வியாழக்கிழமை முதியோர் தின விழா நடைபெறும்.

உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முதியோர்கள் பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(க-111)

## உளமார வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் யாழ். பல்கலைக்கழக நிதியாளருமான

**திருவளர் க. கனகரத்தினம்**

அவர்கள்

முதுதத்துவ மாணிப் பட்டம் பெறும் இன்று (06-10-99) அவர்களைப் பாராட்டி வளம் பல பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஏனைய ஆளணியினர்.
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

[சி/9707]

## கண்ணீர் அஞ்சலி



**சின்னத்துரை சிவசுப்பிரமணியம்**
(வரி மதிப்பீட்டாளர், கொழும்பு மாநகர சபை)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவனும் நல்லூர் தெற்கு சனசமூக நிலையம், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாயிருந்தவருமான சின்னத்துரை சிவசுப்பிரமணியம் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் மறைவுககு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் தெற்கு மக்கள்

அரியாலை. (69703)

## அலுவலகம் திறப்பு

நெடுந்தீவு கோட்டக்கல்வி அலுவலகம் இன்று புதன் கிழமை நெடுந்தீவு மகாவித்யாலயத்தில் திறந்து வைக்கப் படவுள்ளது.

நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரி க. அரசரத்தினம் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் தீவக கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் மேற்படி அலுவலகத்தை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார். (க-111)

**ஈசன் கல்வி நிலையம்**

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

கணக்கீடு

**A/L 2000**


பங்குடைமை

திரு. பாலவாசன்

ஆரம்பம்: 7-10-99 (வியாழன்) 4.00 p m.

(69686)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **செல்லன் நாகலிங்கம்**

ஓரடி மண்ணில் 1942-04-11

ஆறடி மண்ணில் 1999-09-06

திதி: 1999 - 10 - 06

எமது குடும்பத் தலைவரின் பிரிவின் போது சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், எங்கள் துக்கத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றியைக் கூறி இன்று 6-10-99 நடைபெறும் நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

சத்திரங்கை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை

(69709)

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 — 11 — 1932



உதிர்வு 06 — 10 — 1992

அமரர் **K. L. வில்லியம்**
(முன்னாள் யாழ். நியூ சிற்றி பேக்கரி உரிமையாளர்)

தாளாத் துயர் தந்து மீளாத் துயில் கொண்டீர்
ஏழாண்டு கழிந்தாலும் எம் நினைவில் வாழுகின்றீர்
காலமெலாம் நல்லிறைவன் கருணையிலே சாந்திபெற
ஞாலமதில் உள்ளவரை நாம் என்றும் பிரார்த்திப்போம்.

என்றென்றும் நினைவலைகளில் மிதக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

வில்லியம் பேக்ஹவுஸ்,
583, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(69690)

எமது மற்றுமோர் மகத்தான சேவை ஆரம்பம்

வண்ண வண்ண சேலைகள், பட்டு ஜவுளிகள், [சேட்டிங், சூட்டிங் இன்னும் இதர துணிமணி வகைகளை தரமாகவும் மலிவாகவும் வழங்கிவரும்

சிவராதா, நியூசிவராதா புடைவையகத்தினர் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கவிருக்கும்

**உன்னத சேவை**

**'மேருஜன்ஸ் முகவர் தபாலகம்'**

இடம்: இல. 26, கிராண்ட் பசார், யாழ்ப்பாணம்.
காலம்: 06—10—99 காலை 9.00 மணி

**சேவைகள்:**

- தபாற் சேவைகள்
- காசுக் கட்டளைகள்
- தொலைக்காட்சி, வானொலிக் கருவிகளுக்கான உத்தரவுப் பத்திரங்கள்
- தொலைபேசி வசதிகள்
- தொலைநகல் வசதிகள் (FAX)
- E. MAIL சேவைகள்
- கணனி சேவைகள்

மற்றும் இதர தொடர்பு சாதன சேவைகள்!

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்கள்

**மேருஜன்ஸ் சிவராதா, நியூசிவராதா**

TELEPHONE -- 021 - 2786
FAX -- 021 - 2805
E. MAIL -- 021 - 2518

(69702)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்

# வாக்குகளை எண்ணும் பணி இன்று ஆரம்பம்

## முடிவுகள் நண்பகல் வெளிவரலாம்

புதுடில்லி, ஒக். 6

கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் அனைத்தும் முடிவடைந்துள்ள நிலையில் வாக்குகளை எண்ணும் பணிகள் இன்று காலை ஆரம்பமாகின்றன.

காலை எட்டு மணிக்கு வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டதும் நண்பகல் அளவில் முதலாவது முடிவு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள வாக்களிப்பு நிலையங்கள் அனைத்திலும் வாக்குகளை எண்ணும் பணிக்கென லட்சக் கணக்கானோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் மட்டும் 28 வாக்கு எண்ணும் நிலையங்களில் சுமார் 24 ஆயிரம் பேர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் முடிவுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்புகள் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி மத்தியில் ஆட்சி அமைக்கும் எனத் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் இந்தியாவின் 13 ஆவது நாடாளுமன்றத்தில் அரசமைக்கும் கட்சி குறித்து இன்னும் ஓரிரு நாள்களில் முடிவுகள் தெரியவரும்.

இதேவேளை —

'ஸ்ரார்' தொலைக் காட்சி நடத்திய 'இன்சைட்' கருத்துக்கணிப்பில் பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான

உலக அரங்கில்

தேசிய ஜனநாயகக் கூட்டணி 295 முதல் 305 இடங்களையும்—

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 145 முதல் 155 இடங்களையும் —

ஏனைய கட்சிகள் 85 முதல் 95 வரையான இடங்களையும் — கைப்பற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 இடங்களில் உள்ள சுமார் ஒரு லட்சத்து 67 ஆயிரம் வாக்காளர்களிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

மராத்திய செய்தி நிறுவனமான லோக்மத் நடத்திய கருத்துக் கணிப்பில் தேசிய ஜனநாயக முன்னணி 242 இடங்களையும்—

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 225 இடங்களையும்—

இடதுசாரிகள் 42 மற்றும் ஏனைய கட்சிகள் 25 இடங்களையும்— கைப்பற்றும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடதுசாரிகளின் ஆதரவுடன் காங்கிரஸ் மத்தியில் ஆட்சி அமைக்கும் எனவும் இந்தக் கருத்துக் கணிப்பு தெரிவித்துள்ளது.

1996 ஆம், 1997 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற தேர்தல்களை விட இந்த ஆண்டு இடம் பெற்ற தேர்தல்கள் அமைதியான முறையில் இடம் பெற்றதாக இந்திய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் நடந்து முடிந்த தேர்தல்களின் போது ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக 150 பேர் உயிரிழந்தனர் என்றும் ஆயிரத்து 800 பேர் காயமடைந்தனர் என்றும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது,

தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்கென 4 லட்சம் மத்திய பாதுகாப்புப்படையினரும் 37 லட்சம் ஊர்காவல் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தேசிய மாணவர் படையணியைச் சேர்ந்த 50 ஆயிரம் மாணவர்களும் மேலதிகமாக தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். (இ-6)

## ஜப்பானில் அணுக்கசிவு; விசாரணைக்கு உத்தரவு

### 100 பேர் கொண்ட குழு நியமிப்பு

ஜப்பானின் டோக்கோமோராய் யுரேனியம் பதப்படுத்தும் ஆலையில் ஏற்பட்ட அணுக் கசிவு குறித்து முழு அளவிலான விசாரணை ஒன்றை நடத்துவதற்கு ஜப்பானிய அரசு உத்தரவிட்டுள்ளது

இதற்கென 100 அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

யுரேனியம் பதப்படுத்தும் தொழிற்சாலையில் பணியாற்றும்அவசரகாலப்பணியாயாளர்கள் 55 பேரும் அணுக் கதிர் வீச்சினால் பாதிக்கப்படும் அபாயம் எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து இந்தக் குழு முழு விசாரணை நடத்தும்.

விபத்துக்கான காரணம் மனிதத் தவறா? அல்லது அணு உற்பத்தி ஆலைகள் தொடர்பான விதிமுறைகள் மீறப்பட்டதா? என்பதுகுறித்தும் குழு விசாரணைகளை நடத்தும்.

குழுவின் விசாரணை அறிக்கை விரைவில் ஜப்பானிய அரசிடம் கையளிக்கப்படும் என குழுவின் தலைவர் தெரிவித்தார்,

இந்த அணுக்கசிவு விபத்தினால் உடனடியாக 49 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-6]

உ

**மாவை.பண்டிதர் வி,எம். வைத்திலிங்கம்**

**வாழ்க**

சீர் மேவும் யாழ்ப்பாணம் கற்றோர் – சூழும்
சிறந்த எழில் மாவிட்டபுரம் மண்ணின் மைந்தன்
பேர் மேவும் சண்டிலிப்பாய் ஐடியல் அக்கடமி ஆசான்
பார் மேவும் பண்டிதன் மாவை வி. எம். லிங்கம்
– இன்று
கலைமாணிப் பட்டம் பெற்று வாழ்க !

ஆசிரியர்களும் மாணவர்களும்.

ஐடியல் அக்கடமி,
சண்டிலிப்பாய். [69706]

## கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 05 |
| 02 | 10 |
| 1948 | 1999 |

அமரர் **வேலாயுதபிள்ளை அருணந்தி**
(செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.)

உன் புன்னகை மாறவில்லை, அன்பு மறையவில்லை
நீ மட்டும் எம்மை ஏன் விட்டுப் பிரிந்தாய்? ......
மறுக்கவோ மறக்கவோ முடியவில்லையே ......
குடும்பத்தை ஆற்றுவதா ...... எம்மை ஆற்றுவதா
புரியாமல் தவிக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றென்றும் பிரார்த்திக்கும்

தவிசாளர், உறுப்பினர், ஊழியர்கள்.
சாவகச்சேரி பிரதேச சபை
கொடிகாமம்.

(69692)

## 20 ஆண்டுகளில் மனிதன் செவ்வாய்க்கு பயணமாவான்!

### நாஸா நிறுவனம் அறிவிப்பு

நியூயோர்க் ஒக் 6

புதிய நூற்றாண்டில் மனிதன் செவ்வாய்க்கிரகத்துக்குப் பயணம் செய்ய முடியும் என்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாஸா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டாயிரத்து 16 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்துக்கான முதலாவது பயணிகள் விண்கலம் தனது பயணத்தை ஆரம்பிக்கும் என 'நாஸா' அறிவித்துள்ளது.

இதேவேளை—

21 ஆம் நூற்றாண்டு விண்வெளிப் பயணங்களின் நூற்றாண்டாக அமையும் என விண்வெளி ஆராய்ச்சியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனைய கோள்களை ஆராய்வதற்கென விண்கலங்களை அனுப்புவது அதிகரிக்கும். இந்தப் பணிகளில் தற்போது உள்ளதை விட அதிகளவு நாடுகள் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டும்.

குறிப்பாக செவ்வாய்க் கிரகத்துக்கான விண்கலங்களின் பயணங்கள் அதிகரிக்கும். அடுத்த 20 ஆண்டுகளில் செவ்வாய்க்கான மனிதனின் பயணம் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து பிற கோள்களுக்கு மனிதன் உல்லாசப் பிரயாணம் செய்வது ஆரம்பித்துவிடும். இப்படி விண்வெளி ஆராய்ச்சியியல் நிபுணர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்துக்கான மனிதனின் பயணத்துக்கு அடித்தளமாக அங்கு விண்கலங்களை அனுப்புவதிலும், செவ்வாயில் மனிதன் வாழக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்வதிலும் அமெரிக்க 'நாஸா' நிறுவனம் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது (இ-6)

திருடியதாக குற்றம் சாட்டி

## பஸ் நடத்துநரின் கைகள் வெட்டித் துண்டாடப்பட்டன

### புதுடில்லியில் கோரச் சம்பவம்

புதுடில்லி, ஒக். 6

பணம் திருடினார் என்று குற்றம் சாட்டி தனியார் பஸ் நடத்துநர் ஒருவரின் இரு கைகளையும் பஸ் உரிமையாளர்கள் வெட்டித் துண்டாடியுள்ளனர்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அனில் குமார் சர்மா (வயது 27) என்ற இளைஞரின் கைகளே துண்டாடப்பட்டன.

கைகள் இரண்டும் வெட்டப்பட்ட நிலையில் வீதியோரமாக மயங்கிக் கிடந்த இவரைப் பொலீஸார் கண்டுபிடித்து மருத்துவமனையில் சேர்த்தனர்.

அவரைக் கண்டுபிடித்த போது அவரது ஒரு கை முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்துடன் மற்றைய கை வெட்டப்பட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ் பிரயாணத்தின் மூலம் கிடைத்த வருமானத்தில் 200 ரூபா குறைந்ததை அடுத்து அதனைத் தான் திருடிவிட்டதாக சந்தேகித்த பஸ் உரிமையாளர்கள் தனது இரு கைகளையும் துண்டித்ததாக அனில்குமார் பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் தான் அந்தப் பணத்தை திருடவில்லை என்றும் அவர் பொலீஸாரிடம் கூறியுள்ளார். (இ-6)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 |  | 06 |
| 05 | | 10 |
| 1931 | | 1986 |

திருமதி
**பிலோமினம்மா டானியல்**
(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் துணைவியார்)

பதின்மூன்று நினைவுச் சுவடுகளில்
பனிக்குதம்மா நம் கண்ணீர்ப் பூக்கள்
பெற்றாண்டு பேணி வளர்த்தாய் பிரிந்தாய்
தனித்தோமம்மா நாம் உதிரிப் பூக்கள்.

தங்கள் நினைவுகளில்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'' வசந்தம் ''
76/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (சி/ 9208)

## ஹெலி விபத்தில் 12 பேர் பலி

றியாட், ஒக். 6

கிழக்கு சவூதி அரேபியாவின் ரஸ்தன் மோரா என்ற இடத்தில் ஹெலி ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 12 பேர் பலியாகினர்.

சவூதி அரக்கோ என்ற எண்ணெய் நிறுவன அதிகாரிகள் [illegible] (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழ

## துணைவேந்தரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளி விழாவையிட்டு பல்கலைக்கழக மாணவர்களால் வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்றுவரை 11000 பேர் பலதுறைகளில் பட்டம்பெற்று வெளியேறியுள்ளனர். இன்று 4000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இப்பல்கலைக்கழகம் விஞ்ஞானம், மானிடவியல் பீடங்கள் மற்றும் சட்டம், உடற்கல்வி ஆகிய துறைகளுடன் ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டபோதும் பின்னர் விஞ்ஞானம், மானிடவியல் பீடங்களுடன் மாத்திரமே செயற்படத்தொடங்கியது. இரு பீடங்களுடன் ஆரம்பித்த யாழ்.பல்கலைக்கழகம் இன்று கலை, விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், முகாமைத்துவமும் வணிகமும், பிரயோக கணிதம், வியாபாரக் கல்வி, உயர்பட்டக் கல்வி என்று எட்டு பீடங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இவற்றில் இருபீடங்கள் பல்கலைக்கழகத்தில் வவுனியா வளாகத்தில் அமைந்துள்ளன. இவற்றைத்தவிர இராமநாதன் நுண்கலைக்கழகம், சித்த வைத்தியத்துறை ஆகியன பீட நிகர்நிலையில் செயற்படுகின்றன. உடற்கல்வி, கடல்வள கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்வி விரிவாக்கச் செயற்பாட்டில் எமது பல்கலைக்கழகம் சிறந்த பணியாற்றுகின்றது. வெளிவாரிப் பட்டப்படிப்பு, புறநிலை கற்கை நெறி, தொழிலாளர் கற்றை நெறி போன்றனவும் குறிப்பிடத்தக்கன.

எமது பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கு கொள்கையளவில் அங்கீகாரம் கிடைத்தபோதும், செயலுருவம் பெறுவதில் தாமதம் காணப்படுகிறது. எனினும் குறுகிய காலத்தில் அமைக்கப்படும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

பல்கலைக்கழகம் கல்வி கற்கும் மாணவர்களினது கல்வி மற்றும் அவர்களின் நலன்கள பேணல் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. தொழில் வழிகாட்டல் பிரிவு (Career Guidance Office), பழைய மாணவர் தொடர்பகம் (Alumni Office), பழைய மாணவர் சங்கம் (Alumni Association) ஆகியன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் வாண்மைவிருத்திக்கும், பணியாளரின் பணி மேம்பாட்டுக்கும் வேண்டிய (Staff Development Centre) நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வளர்ச்சித் திட்டங்களை இனங்காணவும், அபிவிருத்தியை முன்னெடுக்கவும் திட்டமிடல் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது (Corporate Planning Division).

எமது பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் இன்று எமது நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறப்பாகத் தொழிற்றுறைகளில் சிறந்து விளங்குவதை அறிந்து பெருமைப்படுகின்றேன். வருங்காலங்களிலும், காலத்தின் தேவைக்கேற்ப சிறந்ததோர் அறிவுசார் மனிதவளத்தை இப்பல்கலைக்கழகம் சமூகத்திற்கு வழங்குமெனக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

'மெய்ப் பொருள் காண்பது அறிவு'

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை** (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.)

## மருத்துவ பீடாதிபதி வாழ்த்துகின்றார்

எமது பல்கலைக்கழகம் தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிற இவ்வேளையில் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் வெள்ளி விழாச்சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்.பல்கலைக்கழகம் எமது மக்களுக்குக் கிடைத்த அரும்பெரும் சொத்தாகும். இதன் செயற்பாடுகள் வளர்ந்துகொண்டு செல்லுமேயன்றி ஒருபோதும் குறையமாட்டாது. வளர்ச்சியில் பின்னடையுமா? என்ற கேள்விக்குப் பதில் மருத்துவபீடத்தின் இன்றைய நாடித்துடிப்பேயாகும். சில வருடங்களின் முன்பு ஊசலாடிய மருத்துவபீடத்தின் செயற்பாடுகள் இன்று ஒழுங்காக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்குக்காரணம் அன்பும் நம்பிக்கையுமே என்று கூறுவதில் பெருமையடைகின்றேன்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாண வளாகமாக உருவாக்கப்பட்ட எமது பல்கலைக்கழகம் இன்று பல புதிய துறைகளையும், புதிய பீடங்களையும் கொண்டிருப்பது மட்டுமன்றி இன்னொரு வளாகமான வவுனியா வளாகத்தையும் தனது நிர்வாகத்தின் கீழ் வழிநடத்திக்கொண்டிருக்கின்றது. அந்த வளாகமும் பல்கலைக்கழக அந்தஸ்தைப்பெறும்பொழுது எமது வடமாகாண மக்களுக்கு இரு பல்கலைக்கழகங்களைத் தழுவும்வாய்ப்பு வெகுதூரத்தில் இல்லை. இது மட்டுமல்லாமல் எமது பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான பல்துறைசார்ந்த மையங்களை பல்கலைகழகத்திற்கு வெளியே இலங்கையின் பலபாகங்களிலும் வெளிநாடுகளிலும் அமைக்கப்படவேண்டும் என்ற எனது தூரநோக்கு வெகு விரைவில் நிறைவேறும் என நம்புகிறேன்.

**வைத்தியகலாநிதி. இ. இராஜேந்திரபிரசாத்** (பீடாதிபதி மருத்துவபீடம்)

## விவசாய பீடாதிபதியின் வாழ்த்து

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 25 வருடத்தைப் பூர்த்தி செய்து தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுகின்றது. முதலில் இரண்டு பீடங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் இன்று எட்டுப் பீடங்களுடன் வெற்றிநடைபோடுகின்றது.

பல்வேறு தலைவர்களினால் வழிநடத்தப்பட்டு இன்று எமது துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் விடாமுயற்சியினால் இந்நிலையை அடைந்துள்ளது. எமது மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் ஏறக்குறைய 11,000 பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது.

எமது பல்கலைக்கழகம் யாழ்.மக்களுக்கு மிகவும் தேவையான பொறியியல்பீடத்தையும் மீன்பிடித்துறையையும் விரைவில் பெற்று பல்லாண்டு காலம் எம்மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**எந்திரி இ.விஜயரத்தினம்** (பீடாதிபதி, விவசாயபீடம்.)

## விஞ்ஞான பீடாதிபதியின் வாழ்த்து

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் வெள்ளிவிழாச் சிறப்பிதழில் வாழ்த்துச்செய்தி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

25 வருடங்களாக யாழ்.பல்கலைக்கழகம் செய்த சேவைகள் அளப்பரியன. பல்கலைக்கழகம் வளர்ந்ததோடு விஞ்ஞான பீடமும் வளர்ந்துமலர்ந்தது. பல விஞ்ஞான விற்பன்னர்களை எமது பீடம் இந்த உலகத்துக்கீேர்ந்துள்ளது. அவர்கள் கல்வியில் சிறந்துவிளங்கியதோடல்லாது தமக்கு அளிக்கப்பட்ட கடமைகளை மிகச்சிறப்பாகச்செய்துவருகின்றனர். அதற்கான முக்கிய காரணம் யாழ்.பல்கலைக்கழகம் அமைத்துக்கொடுத்த கல்விமார்க்கமே.

கடந்த காலத்தில் கல்விப்பணியை சிறப்பாக மேற்கொண்டு சேவைசெய்த யாழ். பல்கலைக்கழகம் மேலும் சிறந்தோங்கி உலகளாவியரீதியில் வீறுநடைபோடவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்** (பீடாதிபதி,விஞ்ஞானபீடம்,யாழ்.பல்கலைக்கழகம்.)


## கலைப்பீடாதிபதி வாழ்த்துகின்றார்

1974 ஒக்ரோபர் 06 ஆம் திகதி இலங்கைப்பல்கலைக்கழகத்துறை யாழ்ப்பாண வளாகம் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களைத் தலைவராகக்கொண்டு ஆரம்பமானது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் காலத்தில் முழுமையான தனிப்பல்கலைக்கழகமானது. இப்பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் அவராவார். அவருடைய காலத்தில் பல்கலைக்கழகத்தின் இன்றைய பல கட்டடங்கள், துறைகள், முக்கிய பீடங்கள் உருவாக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகம்,கொழும்பு பல்கலைக்கழகம், களனியாப் பல்கலைக்கழகங்களிலிருந்து பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வந்துசேர்ந்தனர்.

அடுத்து வந்த துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா காலத்தில் பல்கலைக்கழகம் மேலும் முன்னேறியது. விவசாயபீடம் உருவாக்கப்பட்டது. பொறியியற்பீடம், மீன்பிடியியல்பீடம் உருவாக்கப்படதிட்டங்கள்தீட்டப்பட்டன. பல்கலைக்கழகம் சமூகத்துடன் இணைந்தது. பேராசிரியர் குணரெத்தினம் அவர்கள் மூன்றாவது துணைவேந்தரானார். அவருடைய காலத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வுகாரணமாக அவருடைய பதவிக்காலத்தில் துரதிர்ஷ்டவசமாக காலம் துணைசெய்யவில்லை.

நான்காவது துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பதவி ஏற்ற பின் மீண்டும் சிறப்பாக இயங்கிவருகிறது. இன்று ஆறுபீடங்களுடனும் வவுனியாவில் ஒரு வளாகத்துடனும் இயங்கிவருகிறது. இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் 10 கௌரவப்பட்டங்கள் வழங்கப்படுகின்றன. 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் தத்தமது பட்டங்களைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆராய்ச்சிக்காக இரு காலநிதிப்பட்டங்களும் முதுமாணிப்பட்டங்களும் வழங்கப்படுகின்றன. இத்தகைய ரீதியில் விருத்திபெறும் எமது பல்கலைக்கழகம் வரலாற்றில் பல எதிர்நீச்சல்களைச் செய்து வளர்ச்சிபெறுகின்றது. இனியும் அவ்வாறான இடையூறுகள் நிகழாமல் இருக்க ஆண்டவன் அருளை வேண்டி பல்கலைக்கழகத்திற்கு மனப்பூர்வமான வாழ்த்தினை வழங்குகிறேன்.

**பேராசிரியர். செ. பாலச்சந்திரன்,** (பீடாதிபதி, கலைப்பீடம்)




## உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி வாழ்த்து

இலங்கைப் பல்கலைக்கழகம் எவ்விடத்திலே அமைக்கப்படவேண்டும் என்று அன்று சட்டநிருபண சபையிலே விவாதிக்கப்பட்டபோது, சேர்.பொன்.இராமநாதன் அது நகரை அண்டியபகுதியிலே அமைக்கப்படவேண்டும் என்று வாதாடினார். இறுதியில், அவருடைய எண்ணங்களுக்கு மாறாகப் பேராதனையிலே அமைக்கப்பட்டது.

ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (முன்னர் யாழ்ப்பாண வளாகம்) தொடங்கியபோது அவருடைய ஆசைகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டன. யாழ்ப்பாண நகர எல்லையிலே அது அமைவுற்றது மட்டுமன்றி, அவராலே கட்டப்பட்ட, திராவிடக் கலைமரபுகளைப் பேணுகின்ற கட்டடத் தொகுதியிலே அது நிலைபெற்றதுமாகும்.

எல்லோரும் கற்றவர்களானால், அதாவது குறைந்தளவில் ஒரு பட்டதாரியானால், எம்முடைய சமூகத்திலே பல சிக்கல்கள் எழமாட்டா. பல தாமாகவே தீர்ந்துவிடும். இதனை ஒரு பல்கலைக்கழகந்தான் செய்யமுடியும். பொதுவான நாடளாவிய கல்விக்கொள்கை அடிப்படையிலே நாம் இதனைச்சாதிக்கமுடியாது. ஆனால், வெளிவாரிப் பட்டப்படிப்புகளூடாக இதனைச் சாதிக்கலாம். எங்களுடைய பல்கலைக்கழகம் ஓரளவு இதனைச்சாதித்து வருகின்றது. கடந்த 25 ஆண்டுகளிலே இப்பல்கலைக்கழகம் சாதித்தது என்ன என்ற கேள்விக்கு இது ஒரு விடையாக அமையலாம்.

இருபத்தைந்து ஆண்டுகளில் இப்பல்கலைக்கழகத்தின் கற்றல் - கற்பித்தல், ஆய்வு என்பனவற்றின் பெறுபேறுகள் என்ன? எங்களுடைய பட்டதாரிகள் எத்தனைபேர் நாடளாவிய, உலகளாவிய விற்பன்னர்களாக இருக்கின்றார்கள்? இவை போன்ற வினாக்களுக்கு விடைதேடும் வாய்ப்பினை இவ்வெள்ளி விழா எமக்குத்தருகின்றது.

சிறிதாகத் தொடங்கிய எங்கள் உயர்கல்வி நிறுவனம் இன்று பெரிதாக உயர்ந்திருக்கும் இவ்வேளையிலே இதன் தொடக்ககாலத்தவர்களான பேராசிரியர்களான க.கைலாசபதி, கா.இந்திரபாலா, பே.கனகசபாபதி, ஹுவர், வித்தியானந்தன், இராஜரட்ணம், லூதர் ஜெயசிங்கம், சோ.செல்வநாயகம் ஆகியோரையும் இன்னும் பலரையும் எண்ணுகிறோம்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
(பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செய்தி

தமிழ்ச்சமூகத்தின் கல்விப்பாரம்பரியத்திற்கு மகுடமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் இன்றைய தினம் பட்டமளிப்பு விழாவும் இடம்பெறுவது வெள்ளிவிழாவினை மேலும் மெருகூட்டி நிற்கின்றது.

இந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தினுள் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கிவிட்ட அறிவியல்சார் சமூகம் இன்று உலகெங்கும் பரந்து எம்தமிழின் பெருமையினை மேன்மையுறச் செய்துகொண்டிருக்கின்றது.

இன்றைய இக்கட்டான காலகட்டத்திலும் எமது துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் அயராமுயற்சியினாலும், கடின உழைப்பாலும் பல்கலைக்கழகம் பல்வேறு வழிகளிலும் சீரிய முன்னேற்றங்களைக்கண்டுவருகின்றது. இன்னும் துணைவேந்தர் அவர்களின் தூரநோக்கு நாளை மலரப் போகும் புத்தாயிரமாம் ஆண்டிற்கு எமது தமிழ்க் கல்வியுலகம் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள உதவும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

மேலும் இடம் பெற்றுவரும் இனப்போரினால் சிதைந்துபோயிருக்கும் எம்மினத்தை மிகவும் உன்னதமான நிலைக்குக் கட்டியெழுப்பக் கூடியதான கல்வித்தளத்தை நாம் வரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் எம் சமூகத்தின் உயர்வையும் மாறிவரும் உலக நடைமுறைகளுடன் வேகமாக முன்னெடுத்துச்செல்லமுடியும். எமது சமூகத்தின் கல்வியறிவு பல்கிப்பெருகி பல்கலைக்கழகம் மென்மேலும் சிறப்புற நாம் அனைவரும் தியாக சிந்தனையுடன் செயற்படுவோமாக.

R. Joe **இன்பராஜ்** (தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.)

## கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரின் செய்தி

எமது யாழ். வளாக அன்னை பிறந்து, வளர்ந்து, சிறந்து இன்று பூத்துக்குலுங்குகின்றவேளையில் அன்னைக்கு வெள்ளிவிழா. அன்னை வெள்ளி விழாவால் பூரிக்கின்றவேளையில் அன்னைக்கு புதிய பிரசவங்கள்.

பல்கலைக்கழகமாம் நந்தவனம் இன்று பலதேச மலர்களாலும் நிரம்பிப்பொலிகிறது. இவ்வேளையில் அன்னையின் "நிறைவுக்கு" விழா எடுத்திருக்கிறோம். இவ்விழா சிறப்படைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

எமது யாழ். பல்கலைக்கழகம் இன்றுவரை பல கல்விமான்களை இந்த சமூகத்திற்கு தந்திருக்கின்றது. தனது வாழ்வில் இருபத்தைந்தாவது வயதைப் பூர்த்திசெய்கின்ற வேளையில் அன்னைக்கு பல்கலைக்கழக முழுசமூகத்தினரும் ஒன்றிணைந்து விழா எடுக்கின்றோம்.

எமது பிரதேச மக்களின் கல்வி எதிர்பார்ப்பை நிறைவுசெய்துகொண்டு இருக்கும் எமது பல்கலைக்கழகத்தின் சேவைகள் மென்மேலும் வளர்ச்சிஅடையவேண்டும் என்று இவ்வேளையில் மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

**அ.கிஷ்ணதாஸ்** (தலைவர்,கலைப்பீட மாணவர் ஒன்றியம்.)

வெள்ளி விழா ஆண்டில் ஒளிவீசும் யாழ் பல்கலைக் கழகம் மென்மேலும் சிறப்புடன் பிரகாசிக்க கனிவுடன் வாழ்த்துகின்றோம்.

STP


கணனி உலகின் புதுமைகளைத் தன்னகத்தே கொண்ட...
தகவல் தொழில் நுட்பத்தில் புதியதோர் முன்னோடி நிறுவனம்...

STP Computer World
No: 54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P: 021 2674, E-mail: stp@sltnet.lk, Fax: 021 2674

OUR HERTIEST
TO THE JAFFNA
ON ITS SILV
CITY TELE
COMPUTER
11,Ramanathan Road,
University View,
Jaffna.
E_M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழாச் சிறப்பு மலர் 25



## பெரும் பொருளாளர் வாழ்த்து

யாழ். பல்கலைக்கழகம் தனது வெள்ளிவிழாவினை நிறைவு செய்வது மிகவும் பெருமையானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் இருக்கின்றது. தமிழ்ச்சமூகத்தின் அறிவுத்தேடலின் கருவூலமாகத் திகழும் யாழ். பல்கலைக்கழகம் என்றும் இளமையுடனும் புதுப்பொலிவுடனும் திகழ மனமார வாழ்த்துவதில் பெருமிதம்கொள்கின்றேன்.

S.T.B. **இராஜேஸ்வரன்** (பெரும் பொருளாளர், பல்கலைமாணவர் ஒன்றியம், சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உபதலைவர் செய்தி

எமது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் இன்று தனது இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்திசெய்து நிற்கின்றமை எமது முழுத்தமிழ் சமுதாயத்திற்குமே பெருமையையும், மகிழ்ச்சியையும் தருகின்றது. அறிவுத்தேடலின் நிலைக்களனாகத்திகழும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் தமிழ்ச்சமூகத்தின் விழுமியங்களைப் பிரதிபலிக்கக்கூடியவாறாக ஆரம்பகாலந்தொட்டே இருந்துவருகின்றது.

நீடித்துவரும் இனப்போரினால் பல்வேறுபட்ட துன்பியல் வேதனைகளைச்சுமந்து எமது தமிழ்ச் சமுதாயம் வாழ்ந்துவருகின்றது. எத்துணை இடர்வரினும் மனம் சளைக்காமல் தன்னம்பிக்கையுடன் முன்னேறத்துடிக்கும் எம்மக்களின் மனஉறுதியினால் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றது.

வரப்போகின்ற புதிய புத்தாயிரமாண்டையும் (Millennium) அது தோற்றுவிக்கப்போகும் சவால்களையும் முகங்கொடுத்து எதிர்நோக்க நாம் ஒவ்வொருவரும் எம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்குரிய அடித்தளமாக எமது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அறிவியல் தேடலுக்கு மட்டுமல்லாது எமது சமூக விழுமியங்களை வளர்க்கும் பண்பாட்டுத்தேடலுக்கும் எமது பல்கலைக்கழகத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

நாளுக்குநாள் மாறிவரும் அறிவியல் வளர்ச்சியுடன் எமது தமிழ்ச் சமூகமும் இணைந்துகொள்ள வாய்ப்பளிக்கும் தளமாக எமது பல்கலைக்கழகம் இருந்துவருகின்றமை எமது தமிழ்ச்சமூகத்துக்குக்கிடைத்த வரப்பிரசாதமாகும். இன்னும் எமது பல்கலைக்கழகத்தைப் பல்வேறு வழிமுறைகளிலும் கட்டியெழுப்ப அறிவியல் சமூகம் தன்னை முழுமனதுடன் அர்ப்பணிக்கவேண்டும்.

பல்கலைக்கழகத்தில் நாம் கற்ற கல்வியானது சமூகத்தின் சகல தரப்பினரையும் சென்றடைந்து அதன்மூலம் சகலரும் பயன்பெறக்கூடிய நிலைமையினைத் தோற்றுவிக்கவேண்டும். கல்வி கற்ற, கற்கின்ற சமுதாயத்தினர் சுயநலங்களைத் தூக்கியெறிந்து பரந்தநோக்கில் சமுதாயப்பார்வையுள்ளவர்களாகவும், நியாயங்களுக்காகவும், நீதிக்காகவும் போராடுபவர்களுமாகத் தம்மை மாற்றியமைப்பதே இந்த வெள்ளிவிழாவில் எமது பல்கலைக்கழகத்திற்குச் செய்யும் மகப்பெரிய கடமையாகும். எல்லாவற்றுக்கும் மேலாக நீடித்துவரும் இனப்போரினால் சிதைந்துபோயிருக்கும் எம்மினத்தை தியாக சிந்தனையுடன் கட்டியெழுப்புதல் ஒன்றையே வெள்ளி விழாக்காணும் எம்பல்கலை அன்னை எதிர்பார்த்து நிற்கின்றாள்.

**மு.கோபாலகிருஷ்ணன்** (உப தலைவர்,யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.)

## மருத்துவமாணவர் ஒன்றியத் தலைவர் செய்தி

எமது சமுதாயத்தின் கண்ணெனப் போற்றத்தக்க கலைக்கூடமாக விளங்கும் யாழ். பல்கலைக்கழகம் தனது அரும்பெரும் சேவையால் 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்கின்ற இவ்வேளையில் இச்சமுதாயத்துடன் இணைந்து அதனை வாழ்த்துவதில் எமது மருத்துவபீட மாணவர் ஒன்றியமும் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

25 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண வளாகமாக உருவாக்கப்பட்ட எமது பல்கலைக்கழகம் இன்று பல புதிய பீடங்களையும், புதிய துறைகளையும்கொண்டு ஒரு சிறந்த துணைவேந்தரின் வழிநடத்துதலின் கீழ் பெரும் விருட்சமாக வளர்ந்து சேவைசெய்துவருவது பெருமைப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

எமது பல்கலைக்கழகம் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில் எமது மருத்துவபீடமும் 21 ஆண்டுகளைப் பூர்த்திசெய்கின்றது. இதுவரைகாலமும் ஏறத்தாழ, 900 வைத்தியர்களை உருவாக்கி ஓர் உன்னத சமுதாயப் பணியினை மேற்கொண்டுள்ள எமது மருத்துவ பீடமும் சிறந்த நிலைக்கு மேலும் வளர்ச்சியடைந்து உலகளாவிய ரீதியில் போற்றப்படுவதுடன் எமது சமுதாயத்திற்கு பெருமை சேர்க்கவேண்டியதும் அவசியமாகும்.

எமது மருத்துவமாணவர் ஒன்றியமும் 1980ம் ஆண்டு உருவாக்கப்பட்டு எமது பல்கலைக்கழக மருத்துவபீட நிகழ்வுகளில் கலந்து அவற்றின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் ஊன்றுகோலாக விளங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

எமது தமிழ்ச்சமுதாயத்தின், தனிப்பெரும் சொத்தான எமது பல்கலைக்கழகத்தினை பேணிக் காத்து, அது மென்மேலும் வளம்பெற உழைக்கவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். எமது பல்கலைக்கழகமும் அதன் அனைத்துப் பீடங்களும், துறைகளும் உலகளாவிய ரீதியில் போற்றத்தக்க சிறந்த ஸ்தாபனமாக வளர்ந்து மென்மேலும் எம்மக்களுக்கு சேவைசெய்து ஒவ்வொருவரது மனதிலும் ஊன்றிப்பதிந்து நிற்கும் என்பதில் நம்பிக்கை கொள்கின்றோம். இதற்காக எமது மருத்துவ மாணவர் ஒன்றியம் மருத்துவமாணவர் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**சு.சுரேந்திரகுமாரன்** (தலைவர், மருத்துவ மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.)

NGRAULATIONS
UNIVERSITY
ER JUBILEE
COM AND
SERVICE
el: 2104,2608,
2676
ax: 2104
il citymo @ sltnet,lk

வெள்ளிவிழாவினைக் காணும் யாழ். பல்கலைக்கழகம்
வானளாவச் சிறப்புற வாழ்த்துகின்றோம்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட ஸ்பெஷல் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம், புருட்சலட் ஐஸ்கிறீம், ஜெலி ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம், றோல், பட்டர்கேக், மிக்சர், லட்டு, மஸ்கட் இன்னும் பலவகையான சிற்றுண்டி வகைகளையும் பெற்றிட யாழ்நகரில் தலைசிறந்த ஸ்தாபனம்

Raja Cream House
36, Kasthuriyar Road, Jaffna.

## விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவரின் செய்தி

வெள்ளிவிழாவைக் கொண்டாடும் இந்த வேளையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடம், பெருவிருட்சமாக
விரிந்து -
வளர்ந்து -
உயர்ந்து நிற்கிறது.
உலகெங்கும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களாலும்,
உன்னத கல்விமான்களாலும்,
எமது பீடம் அங்கீகரிக்கப்பட்டது என்பதை எண்ணும்போது,
மெய்சிலிர்க்கின்றது!

இந்தக் கலைக்கோயிலில் கல்வி பயிலக்கிடைத்தது பெரும்பேறு என உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது.

உலகளாவிய ரீதியில் மதித்துப் போற்றப்படுகின்ற பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் விஞ்ஞான பீடத்தின் 'அதீதவிளைச்சலுக்கு' வித்திட்டிருக்கிறார்கள்; தன்னலமற்ற சேவையில் இன்றும் தம்மை அர்ப்பணித்து எமதும் பீடத்தினதும் உயர்வுக்கு ஊக்கம்கொடுத்து உறுதுணை வழங்குகிறார்கள்; நாளையும் வழங்குவார்கள்.

இவ் விஞ்ஞான யுகத்தில் காலஓட்டத்திற்கு இணையாக வெள்ளிவிழா ஆண்டில் உயர்கல்விப்பீடம் போன்ற புதிய புதிய பீடங்களையும் துறைகளையும் தன்னகத்தேகொண்டு யாழ்.பல்கலைக்கழகம் வீறு நடைபோடுகிறது.

துணைவேந்தர் அவர்களின் முயற்சியாலும், கல்விசார், கல்விசாரா அங்கத்தவர்களின் அயரா உழைப்பாலும் யாழ்.பல்கலைக்கழகம் மீண்டும் தொடர்ந்து மிடுக்கோடு நிமிர்கிறது.

யாழ். கல்விச்சமூகத்தின் இதயத்துடிப்பான யாழ்.பல்கலைக்கழகம் வருங்காலத்திலும் அதன் சேவை செயற்பாட்டின் மூலம் வானளாவ உயரவேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

**ஜெயந்தன்** (தலைவர், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்.)

## விவசாயபீட மாணவர் ஒன்றியத் தலைவரின் செய்தி

இன்று உலகம் முழுவதுமே வரப்போகின்ற புத்தாயிரமாம் ஆண்டை எதிர்கொள்ளத் தயாராகின்ற இந்த இறுதி நேரத்திலே எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அன்னை தனது இருபத்தைந்தாவது அகவையைப் பூர்த்திசெய்கின்றாள் என்பதையிட்டு அவளின் குழந்தைகளில் ஒன்றான விவசாயபீடமும் மகிழ்ச்சியால் பூரிப்படைந்து தாமும் தாயாம் யாழ். பல்கலைக்கழகத்தை வாழ்த்துகின்றாள்.

எமது விவசாயபீடமானது யாழ். பல்கலைக்கழகத்தின் நான்காவது பீடமாக 13.12.1990 இல் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களால் வளம்கொழிக்கும் வன்னி மண்ணின் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஐந்து வருடங்களின் பின்னர் துரதிர்ஷடவசமாக 26.07.1996 இல் ஆரம்பிக்கப்பட்ட 'சத்ஜ' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து, வன்னியின் பல இடங்களில் தற்காலிகமாக இயங்கி, இறுதியாக யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் அப்பீடத்தின் பீடாதிபதி வைத்திய கலாநிதி திரு. R. பிரசாத் அவர்களின் உதவியோடு தற்காலிகமாக இயங்கி தற்போது தனக்கென்ற ஒரு சொந்த இடத்தில் இயங்குகின்றது.

இன்றைய பட்டமளிப்பு விழாவில் விவசாய பீடத்தின் நான்காவது அணியினர் பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர். வெளியேறுகின்ற நான்காவது அணி உட்பட இன்றுவரை பத்தாவது அணியையும் விவசாயபீடம் தன்னகத்தே கொண்டுள்ளது.

1991 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது விவசாயபீட மாணவர் ஒன்றியமானது பல இன்னல்களுக்கும் வசதியீனங்களுக்கும் மத்தியிலும் தனது வருடாந்த செயற்பாடாக விவசாய வாரம், "பசுந்தோகை" மலர் வெளியீடு போன்றவற்றை நடத்தி எமது மாணவர்கள் விவசாயத்துறையில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை வெளிக்கொணர்கின்றது. இத்தோடு மட்டுமல்லாது எமது மண்ணில் விவசாய சமூகத்தினரிற்காக பல செயற்பாடுகளை இனிவரும் காலங்களிலும் முன்னெடுக்கும்.

**இ.சஞ்சீபன்** (தலைவர்,விவசாயபீட )

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரின் செய்தி

கலங்கரை விளக்காய் - கடந்த
காலங்களைக் கடந்து நின்று
கடும்புயலடித்த போதிலும்
காலூன்றி உறுதியொடு
உயர்ந்துநின்று
இன்று வெள்ளிவிழாக்காணும்
எங்கள் பல்கலைக்கழகமே
கலைக்கோவிலே
நீ வாழ்க!
புத்தாயிரமாம் ஆண்டுக்குள்
புதுப்பொலிவோடு புகும்நீயோ
பத்தாயிரம் கல்விமான்களை
பாருக்குள் அனுப்பிவைத்தாய்
கல்விச் சேவையொடு
சமூக நலச்சேவை
தமிழுக்கும் பல சேவை செய்தாய்.
நாடும் வீடும் போற்ற
ஏடும் எழுத்தும் போற்ற
வாழ்க! என்றும் நீ வாழ்க!!

**சதாசிவம் ஐங்கரன்** (செயலாளர்)
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

## உன்னதம் படைத்திடும் பல்கலை நூலகம்

ஈழத்தமிழர் வாழ்வியல் வளர்ச்சியில்
இரண்டறக்கலந்து
இளமை மதர்ப்புடன்
வெள்ளி விழாக்காணும்
யாழ்ப்பாண பல்கலையின்
உயிர்நாடியென
உன்னதம் படைத்திடும்
அறிவூற்று நூலகமாம்
பல்கலை நூலகம்

நூலகம் என்பது தகவல்மையம்
அடிப்படைத்தேவைகள் மூன்றல்ல - இன்று
தகவல்(ஐகெழசஅயவழைெ) என்பதும்
-தலைமைத் தேவையாய்
பல்கலைக்கழக ஆய்வுசார் கல்வியில்
விரிவுரை பெறும் இடம் பாதியே
சுயதேடல் நிறை வாசகன் தேவையை
முழுமையாய் நிறைப்பது நூலக சேவையே

அடுத்த நூற்றாண்டின் தொடக்க தசாப்சத்தில்
முழுமையுடன் பொலியும் கட்டம் தனில்
வேகமாய் வளரும் தகவல்தொழிநுட்பம் - அதன்
பொருந்திடும் அம்சங்கள் உள்வாங்கி,
"நூல்கள் (தகவல்) யாவும் பாவனைக்கே"
"வாசகர் நேரம் பேணுக" என்ற
மந்திரவாசகம் சிரமேற் கொண்டு
எம் நூலகம் சிறக்கும்
நாளைய சந்ததி வாழ்வு வளம்பெற
ஆய்வுகள் பெருகும், அவைதனை
உந்திடும் உணர்வுடன் எம் சேவைகள் விரியும்

இந்த நூலக வளர்ச்சியின் நாற்றங்
கால்களாய் விளங்கிய
முன்னாள் நூலகர், உப - வேந்தர்கள் தம்மை
நூலக விருத்தியே கழக வளர்ச்சியின்
முதன்மை அளவு கோலென உணர்ந்து
தோன்றாத்துணையாய் இடர் சூழ் வேளையில்
வேண்டிய உதவிகள் உறு ஆலோசனைகள்
பலதமைப் பகிர்ந்து
உதவிய அறிஞர் குழாமினர் தமை
நன்றியுணர்வுடன் நினைவில் நிறுத்துவோம்

எங்கள் நூலகம் வளர்ந்து, நிறைந்து
பணியில் பகிர்வில்
சாதனை படைக்கும் கனவுகள் மெய்ப்பட
கடவுளை வேண்டி
நூலக ஊழியர், உத்தியோகத்தர்
அனைவர் சார்பிலும் வாழ்த்துக்கூறி
கல்வி நிறை நன்மாணவர்கள் யாவரும்
கரையிலாக் கல்வியை மூச்சுக்காற்றெனப்
பேணியே பார் எல்லாம்
புகழ் படைக்க நூலக அன்னையின்
வாழ்த்துக்கள்.

**திருமதி ரோ.பரராஜசிங்கம்**
நூலகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

முல்லாத்தனை தெல்லிப்பழையைச் சேர்ந்த த. நடராசா என்பவரது 212130060 V இலக்க தேசிய அடையாள அட்டையும் 0907025769 இலக்க விசேட அ.அட்டையும் 02-10-1999 அன்று கோப்பாய்க்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் சொ. பாக்கியநாதன், மாதா கோயில் ஒழுங்கை, கோப்பாய் தெற்கில் ஒப்படைக்கவும். (சி/9195)

இல. 43 மாட்டீன் வீதி, மேற்கு ஒழுங்கையைச் சேர்ந்த இம்மானுவேல் றூபி அர்ளெஸ் என்பவருடைய விசேட அடையாள அட்டை கொழும்பிலிருந்து வரும் பயணிகள் கப்பலில் வரும் போது யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K.V.K தொலைத் தொடர்பு சேவை, இல. 25 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். [69682]

சிவகுரு வீதி, ஏழாலையைச் சேர்ந்த ஷீபா தங்கவேலு என்பவருடைய தே. அ. அ. [இல. 805892048V] யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். [69652]

## விற்பனைக்கு

நெல்லியடிச்சந்தியில், பருத்தித்துறை வீதியும் மகாவித்தியாலய வீதியும் சந்திக்கும் மூலையை மையமாகக் கொண்டிருக்கும் கடைக் கட்டடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. வி. மகேசு, கன்பொல்லை வீதி, கரவெட்டி. [69638]

இரும்புப்பெட்டி (Iron Safe) விற்பனைக்கு உண்டு. தொடர்பு; க. அரியராஜா இல. 143, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (69655)

14'' X 7'' பாக்கர் கிறசர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 312, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். T. P. No. 3090. (69658)

வான்கோழி, கினிக்கோழி, மணித்தாரா, பொமேரியன் நாயும் ஆண் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- லிங்கமூர்த்தி மயூரன், நவாலி அரசடி மகாவித்தியாலயம் அருகில். [69681]

இறைச்சிக்கோழி (புறொயிலர்) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும். [காலை தொடக்கம் மாலை வரையும்] Lucky, Palaly Road. Tirunelvely. ]69961]

## புறொயிலர் குஞ்சுகள்

2 தினங்கள் வளர்ச்சி அடைந்த Bairaha Farms புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மீண்டும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. வை. சிவகுமார், (அரவிந் வீடியோ அருகில்) நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (696 80)

## பிறிமா குஞ்சுகள்

3 நாள்கள் வளர்ச்சி அடைந்த Prima Hi - Line சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. தொடர்பு: வை. சிவகுமார், (அரவிந் வீடியோ அருகில்) நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (69679)

## இறைச்சிக் கோழி

சிறந்த முறையில் வினிசர் மாஸ் வைக்கப்பட்ட சுவையான புறோயிலர் கோழிகள் தினமும் சுத்தம் செய்து விற்பனை செய்யப்படும். தொடர்பு: 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை. கந்தர் மடம். (செல்வ நாகபூஷணி அம்மன் கோயில் அருகில்) (69683)

இறைச்சிக்கோழி புறோயிலர் மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். [69508]

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் [பாதிக்கோழி உட்பட] சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 7.00 மணி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. அத்துடன் அடை முட்டையும், வாழைக் குட்டிகளும் [10/-] விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர்வளவு] முத்திரைச் சந்தையடி, நல்லூர். [69636]

## மணமகன் தேவை

31-12-73 பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த CIMA பகுதி II சித்தியடைந்த அழகிய மணமகளுக்கு [உயரம் 5' - 2''] லண்டன் பிரஜாவுரிமை உள்ள உயர் தொழில் வகிக்கும் மணமகன் தேவை. தொடர்பு: காவலன் விவாகப் பொருத்துநர், மானிப்பாய்வீதி, உரும்பிராய்ச்சந்தி. [69619]

## தேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. வெளிநாட்டு உள்நாட்டு மணமக்களும் உண்டு. படம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும், தொடர்பு:- துர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (69688)

## மணமகள் தேவை

1.5.68 மிருகசீரிடம் உயரம்5'-10'' HNDA, B.com. பட்டதாரி, அரச நிறுவனத்தில் தொழில் செய்யும் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: காவலன் விவாகப் பொருத்துநர், மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி. [69620]

1968 புநர்பூசம் 2 ஆம் விருச்சிக லக். 7 செவ். 8 பாவம் உயரம் 5' - 10'' B.Sc. சிவில் என்ஜினியர்,கொழும்பு. டாக்டர் மணமகள் தேவை. மருத்துவபீட மாணவிகளும் விரும்பத் தக்கது. தொடர்பு: காவலன் விவாகப் பொருத்துநர், மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி. [69617]

10-10-67 பூராடம் 2 இல் செவ்வாய் (M.Sc. பொறியியலாளர், இலங்கை) அமெரிக்காவில் P.H.D. முடிக்க இருப்பவருக்கு மணமகள் தேவை. பட்டதாரிகள், மருத்துவபீட இறுதியாண்டு மாணவிகள், டாக்டர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு! காவலன் விவாகப் பொருத்துனர், மானிப்பாய் வீதி, உரும்பிராய் சந்தி. (69618)

## உடன் தேவை

சிறிய ஜெனரேற்றர் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்: த. சங்கரப்பிள்ளை, 21, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். [69648]

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் றிக்கோ பத்மநாதனின்இல. 22/3 A விதானையார் வீதியில் உள்ள மாடிவீடு உடன் விற்பனைக்கு உண்டு. காலை 9 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும். (69689)

## கல்வி 99

Maths, English, விஞ்ஞானம் ஆண்டு 6 தொடக்கம் O/L வரை ஆரம்பத்திலிருந்து Paper Class உட்பட மிக அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். திரு. சண்முகராசா, பூதர்மடம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு. (69649)


### ராணி காமிக்ஸ்

புதிய ராணி காமிக்ஸ்
ஆனந்த விகடன்
பொக்கட் கலண்டர்
என்பன விற்பனையில்

**பாலன் புத்தக நிலையம்**
87,சிவன்வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.
(69705)

FAN & LIGHT 2x1
SAVE ELECTRICITY

IDEAL FOR STUDENTS & INDIVIDUAL USE
LANKA NIPPON
No 18 Keyzer Street, Colombo 11
Tel: 437735 Fax . 437736
No.10, Trelawny Place,(Behind Milk Bar),Bambalapitiya Junction,
Colombo 4 Tel.589992
(சி/9194)

O/L 99 Dec.
கணிதம்
வினா விடை வகுப்பு
ஆரம்பம்: 9-10-99
சனி, ஞாயிறு
நேரம் காலை 6.30-7.30
திரு. செ. செல்வறஞ்சன்
**றேடியன்ற் கல்வி நிலையம்**
கச்சேரி, யாழ்.
(சி/9206)


## வாழ்த்துகின்றோம்

**நெல்லியடி மெ. மி. த. க பாடசாலையில்**

உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து கல்வியிலும் ஒழுக்கத்திலும் சகல மாணவர்களும் சிறந்து விளங்க வேண்டும் என்று அயராது சேவையாற்றும் அதிபர்

**கணேசமூர்த்தியையும் சக ஆசிரியர்களையும்**

அவர்களது சேவையும் ஆயுளும் நீண்டகாலம் நீடிக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**நெ. மெ. மி. கட்டட குழுவின் தலைவரும் அதன் அங்கத்தவர்களும்.**

நெல்லியடி கரவெட்டி.

[சி/9204]

## வாழ்த்துகின்றோம்

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபைப் பாலர் பாடசாலையில் அர்ப்பணிப்புடன் பணி புரியும் ஆசிரியைகளான

**திருமதி வதனி திருச்செல்வம்,**
**செல்வி ஜெயராணி மார்க்கண்டு,**
**செல்வி தர்சினி தம்பித்துரை**

ஆகியோரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம். அவர்களை வாழ்த்துவதுடன் அவர்களது அரும்பணி தொடர முருகப் பெருமானின் அருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினர்**

(சி/9202)

ஸ்ரீராம ஜெயம்

## உலகளாவிய ஆசிரியர் தினத்தில் எமது மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபருக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

சத்தியமும் அன்பும் அரவணைப்பும் கண்டிப்பும் அதிகாரமும் பரிசுத்த நெஞ்சமும் தியாக சிந்தனையும் நிமிர்ந்த நடையும் கனிவான பார்வையும் இரக்க சுபாவமும் கொண்ட இனியவர்தான் எங்கள் அதிபர்

எங்கள் அதிபர் காலைக் கூட்டத்தில் கூறுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தமுள்ள பொன்மொழிகள். எங்கள் மேல் கொண்ட அன்பு மேலீட்டினால், நாம் பண்பட்டு உயர்வடைதல் வேண்டுமென்ற நோக்கினால் கடிந்தும் உரைப்பார். ஆனாலும் அவரது உள்ளம் வெண்தாமரை போன்றது. பசுமையானது.

எங்களுக்காக 'சங்கரப்பிள்ளை மண்டபத்தில்' நடத்தும் காலைப் பிரார்த்தனை எம்மை அமைதியுள்ளவராகவும் வல்லவராகவும் நல்லவராகவும் மாற்றி வருகின்றமையை எம்மால் உணர முடிகின்றது.

எங்கள் அதிபரது அயராத முயற்சியினால் கல்லூரி வாயிலில் அமைக்கப்பட்டுள்ள கமலாசனமும் கலைமகள் திருவுருவும் எமக்கு பாடசாலை வரும் பொழுது தெய்வீக சிந்தனையைத் தூண்டுகின்றன மனச்சாந்தியையும் உண்டுபண்ணுகின்றது.

எங்கள் அதிபரது செயல் ஆற்றலினால் எமது பாடசாலை 'தேவ கடாட்ஷமாகவும்' 'அன்பு பொழியும் பிரசாந்தி நிலையமாகவும்' மாறி வருகின்றது.

எமது அடிப்படை வசதிகளான தளபாட வசதி, மல சல கூட வசதி என்பவற்றையெல்லாம் பூர்த்தியாக்கித் தந்து ஏழை மாணவருக்கு வசதிக் கட்டணத்தைக்கூடத் தளர்த்தித் தந்து லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் வறிய பிள்ளைகளுக்கு பாத அணிகளையும் வாங்கித் தந்து உதவியுள்ளார். காலை புதிய நேரம் 8.00 மணிக்கு பாடசாலைக்கு வந்து மாலை 5.00 மணி வரை மெய்வருத்தம் பாராமல் பசிநோக்காமல், சலிப்படையாமல் பொறுமையுடன் பணியாற்றும் எமது இனிய அதிபரை உலகளாவிய ஆசிரியர் தினமான ஒக்ரோபர் ஆறாம் நாளான் இன்று மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

எங்கள் அதிபர், எமக்கு அன்பான அன்னையாகவும் கண்டிப்பும் அதிகாரமும் கொண்ட தந்தையாகவும் பாசமிகுந்த குருவாகவும் விளங்குகின்றார். அவரது அரவணைப்பிலும் வழிகாட்டலிலும் உள்ளநாம் கல்வியில் உயர்வடைந்து அவருக்குப் பெருமை தேடிக் கொடுப்போமென இந்நாளில் உறுதியளிக்கின்றோம்.

எமது இனிய அன்புநிறை பாசமிகு அதிபர் அவரது வாழ்க்கைத்துணைவி, குழந்தைச் செல்வங்களுடன் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ வேண்டுமெனவும் எமது உள்ளம்கவர்ந்த அதிபர் ஓய்வு பெறும் வரை எங்கள் கல்லூரியிலேயே அவரது பணி சிறப்பெய்த வேண்டும் எனவும் ஆண்டவரை இறைஞ்சி அவரை இதய பூர்வமாக வாழ்த்தி நிற்கின்றோம்.

நன்றி.

அன்பு நிறைந்த
மானிப்பாய் இந்து ஆண்டு 8D மாணவத் தலைவன்
**து. கஜேந்திரனும்**
8 D மாணவர்களும்.

(சி/9196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோட்டறக்ட் கழகம் நடத்தும் நுண்ணறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாவட்டபாடசாலை மாணவர்களின்பொது அறிவு நுண்ணறிவு ஆகியவற்றை வளர்க்கும் நோக்கில் யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் மாவட்டரீதியில் பொது அறிவு, நுண்ணறிவுப் பரீட்சை ஒன்றை நடத்தி வருகிறது.

இதற்கென தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் கடந்த புதன்கிழமை முதல் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வினாத்தாள்கள் மாணவர்களிடம் ஒப்படைக்கப்படும். அவர்கள் அதற்கான விடைகளைத் தேடி பூர்த்தி செய்து மீண்டும் அவற்றைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

விடைத்தாள்களை ஒப்படைக்க வேண்டிய இறுதி நாள் இம்மாதம் 11 ஆம் திகதி ஆகும்.

# வடமராட்சி இளைஞர் இருவர் நஷ்டஈடு கோரி மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக். 6

பருத்தித்துறை பொலீஸாரினாலும் இராணுவத்தாலும் கடந்த ஜூலை மாதம் கைது செய்யப்பட்டு கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த இருவரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சட்டத்தரணி விசாகேச சந்திரசேகரம் மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

பாலகிருஷ்ணன் பாலமுரளி, பாலசுந்தரம் தேவந்திரம் ஆகியோர் தொடர்பாகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்றும் சட்டத்தரணி தனது மனுவில் கோரியுள்ளார்.

மனுவை விசாரணைக்கு அனுமதித்த நீதிமன்றம் மேற்படி நபர்களை உடனடியாக நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரச சட்டத்தரணிக்கு பணிப்புரை விடுத்தது.

(இ-3-க)

# கர்ப்பிணிப் பெண் மரணம்; வைத்தியர் விசாரணையில்!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஒக். 6

வவுனியாவில் கர்ப்பிணிப் பெண் ஒருவரும், அவரது சிசுவும் உயிரிழந்த சம்பவம் ஒன்று தொடர்பாக தனியார் வைத்தியர் ஒருவர் உட்படபலர் மீது வவுனியாப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த ஜோஸி (வயது 31) என்ற கர்ப்பிணிப் பெண்ணுக்கு தனியார் வைத்தியர் ஒருவர் அறுவைச் சிகிச்சை செய்தார் என்றும் —

அச்சமயம் அவரது குழந்தை உயிரிழந்து விட்டது என்றும் —

அதன் பின்னர் மயக்க நிலையில் இருந்த அந்தப் பெண் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் —

கூடுதலான இரத்தப் பெருக்கு காரணமாக அவர் அங்கு நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது

இதைத் தொடர்ந்து பிரஸ்தாப வைத்தியரைப் பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

[இ--3]

## தீவகத்தில் ஆரம்பக்கல்வி

# செயற்பாட்டு அறைகளை அமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் ஒக். 6

தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட 4 பாடசாலைகளில் ஆரம்பக் கல்விச்செயற்பாட்டறைகளை அமைப்பதற்கு வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 6 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது

புங்குடுதீவு ம. வி. நெடுந்தீவு ம. வி. எழுவைதீவு றோ. க. த. க. பாடசாலை, ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே தரம் ஒன்றுக்கான ஆரம்பக் கல்விச் செயற்பாட்டறைகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வருட இறுதிக்குள் மேற்படிசெயற்பாட்டறைகள் அமைக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்படும் எனவும்—

இதுவரை தீவக வலயத்துககு உட்பட்ட 16 பாடசாலைகளில் ஆரம்பக் கல்விச் செயற்பாட்டறைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (-7)

# இவ்வருடத்துக்கான பாடநூல் 9 மாதங்களின் பின் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இந்த ஆண்டு விநியோகித்திருக்க வேண்டிய இலவச பாடநூல்களில் ஒரு தொகுதி தற்போதுதான் இங்கு வந்துசேர்ந்துள்ளது.

அண்மையில் காங்கேசன்துறைக்கு வந்துசேர்ந்த 'லங்கா முடித்த' கப்பல் மூலமே இவை எடுத்துவரப்பட்டன.

கடந்த ஞாயிறு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு எடுத்துவரப்பட்ட இந்த நூல்கள் தற்போது தரம்பிரிக்கப்பட்டு வருவதாகவும்—

விரைவில் இவை சகல கல்வி வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும்—

யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் எனத் தனித்தனியே அனுப்பிவைக்கப்பட்ட இந்த நூல்கள் இந்தமுறை யாழ் கல்வி வலயத்துக்கே முழுவதுமாக அனுப்பி வைக்கப்பட்டதனால் அவற்றைத் தரம்பிரித்து வழங்குவதில் கல்வி அதிகாரிகளுக்கு சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-ரீ)

# இம்மாத உணவு நிவாரணம் அடுத்த வாரம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 6

ஒக்ரோபர் மாதத்துக்கான உலர் உணவு நிவாரணம் அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலக அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை —

இதுவரை வழங்கப்படாத ஒகஸ்ட் மாதத்துக்கான உலர் உணவு நிவாரணத்தை வழங்குவது பற்றி இது வரையும் எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஐ-5]

## மாத்தளை பொலீஸ் நிலையத்தில் உள்ள

# இந்துமதகுருவை விடுவிக்குமாறு மனித உரிமைக் குழுவிடம் மனு

கொழும்பு, ஒக். 6

மாத்தளை நாவுல்ல பொலீஸ்நிலையத்தில் கடந்த ஒன்றரை மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்து மத குருவை நீதிமன்றத்தில் ஆயர் செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் செனவிரத்னவிடம் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கோரியுள்ளார்.

மட்டக்களப்பு கரவெட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பேரின்பம் என்னும் இந்து மதகுரு லுணுகல பாலமுருகன் ஆலயத்துல் பூசகராக பணி புரிந்தார் என்றும்—

கடந்த ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட இவர் தொடர்ந்து பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும்—

அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய் வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்றும்— ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

[இ-3]

# ஆசிரியர் வள ஆளணிப் பயிற்சி இந்தமுறை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 6

இதுவரை காலமும் திருகோணமலையில் நடத்தப்பட்டு வந்த ஆசிரியர் கற்பித்தலுக்கான வள ஆளணிப் பயிற்சி இந்தமுறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளி இடங்களுக்குச் செல்வதில் உள்ள போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டே இந்தக் கருத்தரங்கு இந்தமுறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

யாழ். கல்வித் திணைக்களத்தில் கடந்த ஞாயிறு முதல் ஆரம்பமாகி இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றுவருகின்றது.

2 ஆயிரமாம் ஆண்டில் தரம் 2 ஆசிரியர் கற்பித்தலுக்காக வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட மொத்தம் 30 பேருக்கு இந்த வள ஆளணிப் பயிற்சி வழங்கப்பட்டுவருகின்றது.

தேசிய கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த தமிழ்ப்பிரிவு கல்விப் பணிப்பாளர் பி. சுப்பிரமணியம், செயற்திட்ட அதிகாரி எஸ். தங்கவேல் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்விப் பிரிவு அதிகாரி எஸ். மகேசு ஆகியோரே இங்கு வருகைதந்து இந்தக் கருத்தரங்கை நடத்திவருகின்றனர். (ஐ-9)

## ஐ நா. தூதரக உதவி

சுன்னாகம், ஒக். 6

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் புதிதாக மக்கள் மீளக் குடியமர்ந்த கட்டுவன் மேற்கு கிராமசேவகர் பிரிவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இப்பகுதியில் ஒரு சனசமூக நிலையம் புதிதாக அமைக்கப்படுவதுடன் இன்னொரு சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்படும். அத்துடன் ஆறு பொதுக் கிணறுகளும் திருத்தம் செய்யப்படவுள்ளன.

(ஐ-27)

## திறப்பு விழா

திருநெல்வேலி, ஒக். 6

கொக்குவில் தாவடி காளி அம்பாள் சனசமூகநிலையத்தின் பாலர் பாடசாலை கட்டடத் திறப்பு விழா கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமையன்று நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தை நிறுவுவதற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. (ஐ-135)

## குழாய்க் கிணறு

திருநெல்வேலி, ஒக். 6

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்திற்கு குழாய்க்கிணறு ஒன்றை நிறுவுவதற்கு வலி. தெற்கு பிரதேச சபை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஐ-135)

## ஆரம்ப சுகாதார நிலையம்

சுன்னாகம் ஒக். 6

வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்குவேலியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் இந்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

[ஐ-27]

## புனரமைப்பு

திருநெல்வேலி, ஒக். 6

வண்ணை - நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தின் திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதேவேளை இம்மண்டபத்தில் நாவலர் தர்மகர்த்தா சபையினர் சித்திர வேலைப்பாடுகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-135)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



புகழ் பூத்த ஆச்சாரியாரும் சமயத் தொண்டருமான

**வீரவாகு ஐயாத்துரை**

அவர்கள் சிவபதமடைந்தமையை ஒட்டிய

நினைவுநாள் 06-10-99 புதன்

மலர்வு: 11-08-1932 உதிர்வு: 06-09-1999

அன்பு மழை பொழிந்தெம்மை ஆரத்தழுவி அருகணைத்து
இன்பு கொண்டே எம் அன்னைக்கும் ஆதரவாய் அருள் தந்து
உன்கடமை நிறைவேற்றி உத்தமனாய் உலகீந்தாய்
அத்தனை எளிதாய் மறக்கலாமோ ஐயா உன்பிரிவை?

எமது அன்புத் தெய்வம் சிவபதம் எய்திய செய்தி கேட்டு எமது துன்பத்தில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பிய அன்பர்கள் மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இனறு (6-10-99) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள்

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

(சி/9187)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் ஆசிரியர் தினம்

இன்றைய நன்னாளில் எமதுகோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

உதவிக்கல்விப் பணிப்பாளரும்
அலுவலர்களும்.

கல்விக் கோட்டம்,
தெல்லிப்பழை.

(69643)

## உலக ஆசிரியர் தினம் - 1999
### யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

ஆசிரிய தெய்வங்களை

## வாழ்த்துகின்றது

அறியாமை எனும் இருளகற்றி அறிவொளி ஊட்டுகின்ற எம் அதிபர் மற்றும் ஆசிரிய மணிகள் நீடூழி வாழ்க! ஆசிரியப்பணி மலர்க! !

பெற்றோர், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
நலன் விரும்பிகள்.

[சி/9190]

## வாழ்த்துகின்றோம்
## உலக ஆசிரியர் தினம் - 1999
### யா / யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை

யா/யூனியன் கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருக்கும், கற்பித்துச் சென்றுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் அவர்களது தன்னலமற்ற சேவையினை, ஆசிரியர் தினமான இன்று மனதார வாழ்த்தி பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா / யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(69645)

### யா/சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
## உலக ஆசிரியர் தினம் - 1999

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

யா/சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் அரும்பணி ஆற்றிவரும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்கள் தமது கல்விப் பணியை இனிதே தொடர இன்று மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
நலன் விரும்பிகள்,

(சி/9188)

## உலக ஆசிரியர் தினம்
### யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய

எழுத்தறிவிக்கும் தெய்வங்களுக்கு

## எங்களின் வாழ்த்துக்கள்!

எழுச்சியின் திறவு கோலே!
எண்ணத்தின் நாற்றாங் காலே!
விழிப்புற்ற கல்வித் தாயகத்தின்
விடிவெள்ளித் தூதே! நாங்கள்
தொழுகின்ற இறையே! வாழ்வின்
தொகை நூலே! ஏழைத் தோழன்
அழுகையை அழித்த பாட்டே!
அகிலமா மறக்கும் உங்களை?

மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/ கனகரத்தினம் ம. ம. வி.
(ஸ்ரான்லிக் கல்லூரி)
யாழ்ப்பாணம்.

(69644)

## சிரமதானம்

தென்மராட்சி, ஒக். 6

சர்வதேசலயன்ஸ்தினத்தையொட்டி எதிர்வரும் எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஆஸ்பத்திரிவார்ட்டுகளைத் துப்புரவு செய்வதுடன் அங்குள்ள கட்டில்களுக்கு கறுப்பு வர்ணம் பூசவுள்ளதாகவும் கழகச் செயலாளர் லயன் வி.வி. மகாலிங்கம் தெரிவித்தார். (ம-117)

## பாராட்டு வைபவம்

சண்டிலிப்பாய். ஒக். 6

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள டாக்டர் சி. கணேசலிங்கத்துக்கு வைத்தியசாலையில் கடமையாற்றிய ஊழியர்கள் சேவை நலம் பாராட்டு விழா நடத்தினர். (ம-135)

## இலவச கற்கைநெறி

கொக்குவில், ஒக். 6

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் நிதிஉதவி மூலம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 144 வறிய மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆறு மாதகால இலவச பிரத்தியேக கற்கை நெறி வகுப்புக்கள் மேற்படி பாடசாலையில் இடம்பெற்று வருகின்றன. (ம-69)

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

கணக்கீடு

### A/L 2001

தொங்கல் கணக்கு

ஆரம்பம்: **07-10-99**
பிற்பகல் 4.30

ஆசிரியர்:
திரு. சி. தவா

(69674)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பட்டதாரிகள் தினம் ஒக்ரோபர் 09

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரிகள் தினம் ஒக்ரோபர் 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது பழைய மாணவர் தொடர்பகத்தில் பதிவுசெய்த பட்டதாரிகளுக்கு நிகழ்ச்சிநிரல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய பட்டதாரிகளும் இந் நிகழ்வில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

விவரங்களுக்கு திரு. க.க. அருள்வேல், சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை,
துணைவேந்தர்.

(சி/9198)

### யாழ். இந்து சமூகத்தின்
## இதய பூர்வ வாழ்த்துக்கள்

வார்த்தையில் தெளிவும் கண்ணிலே கனிவும் கண்டிப்பும் காட்டி எண்ணெழுத்தறிவொடு அனுபவ அறிவையும் கலையுணர்வையும் சேர்த்தூட்டி எமது வளமான எதிர்காலத்தின் வழிகாட்டியாக அமைந்து எமது இதயத்தில் வாழும்


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளை மனமார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழையமாணவர் சங்கத்தினர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
நலன் விருப்பிகள்.

(சி/9189)

## வாழ்த்துகின்றோம்



இளவாலை

### புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனாகிய (ஆண்டு 6-12 வரை) இராசு சேவியர்

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா ஞாகார்த்தமாக வழங்கப்படும் முகாமைத்துவ வணிக பீடத்தின் விருதையும் சகலதுறை வல்லுநர் விருதையும் பெறுவதையிட்டு நாம் பேருவகை கொள்கின்றோம்.

இவர் யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத் துறையில் கல்வியில் சிறந்து விளங்கியதுடன் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் பெரு வீரராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பல்கலைக்கழக விளையாட்டவைத் தலைவராகவும் உதைபந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், தாச்சி போன்ற அணிகளின் தலைவராகவும் இருந்ததுடன் கூடைப் பந்தாட்டம், கரபந்தாட்டம் ஹொக்கி போன்ற அணிகளின் அங்கத்தவராகவும் இருந்தார்.

மேலும் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தலைவராகப் பணியாற்றியதுடன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கலைப்பீட மாணவர் ஒன்றியம் போன்றவற்றின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

அத்துடன் கலை கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றதுடன் அதில் தனது தனித் திறமையையும் நிரூபித்துள்ளார்.

இவ்வாறு பல்துறை வித்தகனாக விளங்கிய இ. சேவியரை இந்த வேளையில் வாழ்த்துவதுடன் அவர் மேலும் சிறப்புற்று விளங்க ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பேராசிரியர். க. பாலசுப்பிரமணியம்,
பழைய மாணவர் சங்கத் தலைவர்,
புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

எமது கல்லூரியின் பழைய மாணவன் இராசு சேவியரின் கல்வித் திறனையும் ஏனைய துறைசார் ஆற்றல்களையும் நயந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று இரு விருதுகளை வழங்குவதையிட்டுக் களிப்படையும் நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

(69669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் பல...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் பரந்துபட்ட தாக்கத்தினை ஏற்படுத்தியதா? என ஆராய்ந்தால், நாம் அதிகம் பெருமை கொள்ளக் கூடிய பெறுபேறுகளைப் பெறவில்லை என்பது புலனாகும்.

நாற் சுவருக்குள் மாணவரை இருத்தி பாடத்திட்டத்தை புகட்டி பின் அதைக் கக்க வைத்து அவர்கட்கு பட்டம் சூட்டி விழாவெடுப்பதுதான் பல்கலைக்கழகத்தின் தலையாய பணி எனில் நிச்சயம் அதில் வெற்றி கண்டு விட்டோம்.

ஆனால் வளர்ந்து வரும் மேலை நாடுகளிலும், குறிப்பாக விடிவு பெறத்துடிக்கின்ற நாடுகளில் பல்கலைக்கழகம் ஆற்றும் சேவை எம்மை வியக்க வைக்கின்றது.

எமது கலை, கலாசாரம், பண்பாடு, புதைபொருள் ஆகிய துறைகளில் நாம் எத்தனை ஆய்வுகளை இதுவரை செய்தோம்? இதற்கெல்லாம் வெளிநாட்டு விஞ்ஞான உதவிகள் அத்தனை தேவை என்பதில்லையே. இந்து சமயம் பற்றி, மேடைகளில் பேசுகின்றோம். போட்டிக்கு மாமன்றங்கள். பேரவைகள், சிற்றவைகள் அமைக்கின்றோம். எங்கள் மதத்தின் தொன்மையை இந்து நாகரிகத்தின் ஈழத்து வரலாற்றை அண்டை நாட்டான் அறிய ஆங்கிலத்தில் எதைத் தந்தோம். பண்ணிசையை, பழம் பெருநாடக, நாட்டியகலைகளை, நாட்டுக் கூத்து, நாட்டுப்பாடல், ஆகிய பாரம்பரியங்களை பேணிக் காக்க உருப்படியாக என்ன செய்தோம்? இவற்றை விட நீர்வள, நிலவள, ஆய்வுகளை மேற்கொள்ள என்ன நடவடிக்கை எடுத்தோம்? ''செம்மணி'' விவகாரத்தின் போது தான் எங்கள் பல்கலைக்கழகம் எங்கு நிற்கின்றது என்பதை ஆய்வாளர்கள் கண்டு கலங்கினர்.

இதற்கெல்லாம் நாம் என் செய்வோம், நாட்டு நிலை, நிதி நிலை என்பன சாதகமாக இருக்கவில்லை என்று கூறுவது நம்மை நாமே ஏமாற்றுவதாகும். கிராமப்புற ஆலயங்களில் தேர்த் திருப்பணி, ஆலயத் திருப்பணி எனப் பல கோடி ரூபா செலவாகின்றதே. இதற்குப் பணம் எப்படி கிடைக்கின்றது என்று ஒரு ஆய்வு செய்தால் நிச்சயம் பல கோடி ரூபா உதவி நல்க பலர் காத்திருப்பதைக் காணலாம். பல்வேறு உலக ஸ்தாபனங்களை நாம் பயன்படுத்தத் தவறி விட்டோம்.

நமக்குள்ளே மறைவாக பழைய் கதைகள் பேசுகின்றோம். கோஷ்டிகள், குழுக்கள், போட்டிகள், பொறாமைகள், தனிமனித வெறுப்புக்கள், தகாத நடத்தைகள் என்று பல்வேறு பீடங்களை நாமே அமைத்துக் கொண்டு விட்டோம். இதனால் உயர வேண்டிய ஒரு கலங்கரை விளக்கு, ஒளி குன்றி உயரமும் குன்றி போவதை இனியும் பார்த்து வாளாதிருக்கக்கூடாது.

பயன் பல நல்கி பொலிவுடன் மிளிர எதை எதைச் செய்ய வேண்டுமோ, எந்தத்துறையில் எப்படிக் காலடி எடுத்து வைக்க வேண்டுமோ அதனை ஆராய்ந்து ஆவன செய்வதே இன்றைய எழுச்சி பெறும் பெருவிழாவில் எமக்கெல்லாம் சிந்தனைக்கு விருந்தாக அமையும்.

என்னச் சாதித்தோம் என்பதை விடுத்து, எதை எதை எப்படிச் சாதிக்கப்போகிறோம், என்பதை, அறிஞர்கள், ஆய்வாளர்கள். நலன் விரும்பிகள், நல்ல உள்ளங்கள், சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

மு. திருநாவுக்கரசு
இளைப்பாறிய நீதிபதி

## யாழ்ப்பாண...

(7 ஆம் பக்கத் தொடர்)

தமக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகளிடையேயும் ஒருமித்து ஒரே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டுவந்துள்ள பெருமை இந்தப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு.

தரத்துக்கு ஊறு வராதவகையில் தொடர்ச்சியான முன்னேற்றம் இங்கு ஏற்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பெயரை உயர்ந்திருக்கச் செய்த பேராசிரியர்கள் பல்கலைக்கழகத்துக்கு நற்பெயரை வாங்கித் தந்துள்ள மாணவர்கள் என இங்கு ஆய்விலும் படிப்பிலும் மிகுந்த ஆழமான ஈடுபாடு உண்டு. நமது பட்டதாரிகள் பல்கலைக்கழகத்தின் பெயரைக் கணிக்கப்பட்டதாக அளவு உயர்த்தியுள்ளனர்.

அது மாத்திரமல்லாமல் கடந்த 25 வருடகால யாழ்ப்பாண வரலாறு எழுதப்படும் பொழுது அதில் தவறாது இடம் பெறப்போகும் ஒரு மாணவப்பரம்பரையை வளர்த்து எடுத்த பெருமையும் இதற்கு உண்டு. இது ஒரு பெரியசாதனை.

பல்கலைக்கழகங்களின் உயர்ச்சி, தரம் அவற்றின் பாதிக்கப்படாத வளர்ச்சியிலேயே தங்கி உள்ளது. அறிவை ஊட்டுவதுடன் நின்றுவிடாது. அதனை உண்டாக்கவும் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அரிய சேவைகளை ஆற்றி உள்ளது. தொடர்ந்தும் ஆற்றும். துணைவேந்தர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**
(தகைசால் ஒய்வுநிலைப் பேராசிரியர் யாழ்பல்கலைக்கழகம், வருகைப் பேராசிரியர், உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம் - சென்னை)


சாவகச்சேரி பிரதேச சபை
செயலாளர்

**திரு. வே. அருணந்தி** அவர்களின்
அகால மறைவையொட்டிய

### நினைவுக் கவிதாஞ்சலி!

கலகலத்து கவர்ச்சியாய் பேசிக் களித்தவனே!
சலசலப்புக் கஞ்சாத நம்மருணந்தியே - சாவக
பிரதேச சபையின் செயலராய் பணி செய்து
பிரதேச நலனுக்காய் துணிந்து செயலாற்றினையே!

உன்னையே தாழ்த்தி நீ பேசிடினும் உன் பணியை
என்னரியோர் போற்றிடவே சிறப்பாய் செய்து வந்தாய்!
கண்ணரிய நண்பர்தமை மதித்தே பழகி வந்தாய்!
உன்னுடைய குரலினை நாம் மீண்டும் கேட்பதெப்போ!!

அன்பாக பண்புடனே அனைவரையும் சிறப்பித்து
என்பாகம் இவ்வளவு தானென்றே எடுத்துரைத்து...
உன்பாதை தனைத் தேடி எமை விட்டுச் சென்றவனே!
உன்பாச நினைவாலே சொரிகின்றோம்
கண்ணீரதனை!

நகர சபை, சாவகச்சேரி.
செயலாளரும் உத்தியோகத்தர்களும்
(சி/92.7)


## தலைவராக யாழ் பல்கலை துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஒக். 6

இலங்கை துணைவேந்தர்கள் சம்மேளனத்தில் தலைவராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களின் சம்மேளனக் கூட்டத்திலேயே அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். (உ-5)

## ஓய்வுபெறுகின்றார்

சுழிபுரம், ஒக். 6

வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வரும் சங்கீத பூஷணம் கே. கணபதிப்பிள்ளை சேவையில் இருந்து ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார்.

## ஈராக் கூடுதல் எண்ணெய் விற்க அனுமதி

நியூயோர்க், ஒக். 6

ஈராக் தனது உணவுத் தேவைக்காக எண்ணெயை விற்பனை செய்வது என்ற ஐ. நா. வின் திட்டத்தின் கீழ் ஈராக் மேலும் 300 கோடி டொலர் பெறுமதியான மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கு ஐ. நா. அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுவரை ஈராக் தனது உணவுத் தேவைக்கென 526 கோடி டொலர் பெறுமதியான மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்து வந்தது. தற்போது ஐ. நா. அனுமதி அளித்ததை அடுத்து 826 கோடி டொலர் பெறுமதியான மசகு எண்ணெயை ஈராக் விற்பனை செய்ய முடியும்.

வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் மீது 1990 இல் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையைத் தளர்த்துவதற்கான ஐ. நா வின் ஆரம்ப நடவடிக்கையாக இது இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

### பாதுகாப்புச்...

[முதலாம் பக்கத் தொடர்]

கரித்தது.

குறை நிரப்பு பிரேரணைகள் மூலம் இந்த மேலதிகச் செலவினத்துக்கான நிதி வழங்கப்பட்டது.

அடுத்த ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு செலவினத்தில் இரண்டாயிரத்து 360 கோடி ரூபா இராணுவத்துக்கும்—

ஆயிரத்து 30 கோடி ரூபா பொலீஸ் பிரிவுக்கும்—

எண்ணூற்று 30 கோடி கடற்படைக்கும்—

ஏழாயிரத்து 80 கோடி ரூபா விமானப்படைக்கும் — ஒதுக்கப் படவிருக்கின்றன.

அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் பாதுகாப்புச் செலவீனத்துக்கு அடுத்தபடியாக மாகாண, உள்ளூராட்சி நிர்வாகத்துக்கும, கல்வி நிர்வாகத்துக்கும் அதிகளவு நிதி வழங்கப்படவுள்ளது. (உ-3-7-21)

### யாழ்...

[முதலாம் பக்கத் தொடர்)

சின்னம் ஒன்றை வழங்கவுள்ளனர்.

பட்டமளிப்பு விழாவையொட்டி புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். (உ-3-5)

### தாக்கப்பட்டவர்...

[முதலாம் பக்கத் தொடர் ]

நீதிவான் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-7-5-15-31-117-139)


# வெள்ளிவிழா வாழ்த்துக்கள்

எமது கல்லூரியில் நூலகராகக் கடமையாற்றும்
**திரு. தம்பையா தனபாலசிங்கம்**
அவர்கள் தனது சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்வதையிட்டு அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
(69717)

# வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமான இன்று
கல்வி போதிக்கும்
எமதினிய அதிபர், ஆசிரியர்களையும்
சகல ஆசிரியர் சமூகத்தையும்
வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்,
யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
(சி/9214)

யா/ உரும்பிராய்
# சைவத்தமிழ் வித்தியாலயம்
## ஆசிரிய தினம் - 06.10.99

நம் எதிர்காலச் சந்ததிகளாகிய மாணவர்களை ஆளுமை கொண்ட பூரண மனிதனாக்கி உதவும் கலங்கரைவிளக்குகளான ஆசிரியர்களையும் தலைமை தாங்கி வழிநடத்தும் முதல்வரையும் வாழ்த்தி விழா எடுக்கும் மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் ஆகியோரோடு அவர்தம் பணி சிறக்க நாமும் நீடு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**கணபதி களஞ்சியம்**
பலாலி வீதி, உரும்பிராய்,
(சி/9216)

# யா/ வண். நாவலர் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்

மலையென உயர்ந்து நின்றீர் மலரென
மணத்தைத் தந்தீர்
உடலது உருக எங்கள் உள்ளத்தில் ஒளியைத் தந்தீர்
சேவையே கடமையென்று தேவையை அறிந்து செய்தீர்
வாண்மையே வாழ்க்கையாக மனித வளத்தினை
விருத்தி செய்தீர்
அனைவருக்கும் ஒளியாய் நின்றீர் ஆசிரிய!
என்றும் வாழி.

பழைய மாணவர் சங்கம்,
யா/வண். நாவலர் மகா வித்தியாலயம்
(69718)

வாண்மை விருத்தி பெற்றுள்ள
எமது கல்லூரி ஆசான்களை

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிச் சமூகம்**

# பாராட்டி வாழ்த்துகிறது

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்ற
திரு. ப. திருஞானசம்பந்தன்
திரு. அ. திருலோகநாதன்
திருமதி ஸ்ரீ. மனோகரதாஸ்

பட்டம் பெற்று - பட்டதாரியாகியுள்ள
திரு. த. தயாளன்
திரு. இ. ஜெயரட்ணசிங்கம்
திரு. கு. சிவகுமார்
திரு. ஜோ. யூ. தே. பற்றிக்
செல்வி ச. காசிப்பிள்ளை
திரு. க. சுந்தரலிங்கம்

ஆகியோரை அவர்கள் மேலும் உயர்வு பெற பாராட்டி - வாழ்த்துகிறோம்.

(சி/9212) - கல்லூரிச் சமூகம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுனில் ஆட்ஸ்

9 — 10 — 99 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

**சுனில் ஆட்ஸ்**
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/9210)

---

உ

"எம் கடன் பணிசெய்தல்"

## உடுவில் இந்து இளைஞர் மன்றம்

இன்று யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும்.
எமது மன்ற உறுப்பினரும் மிருதங்க ஆசானுமாகிய

**திரு. நித்தி மதிரூபன்**

அவர்களின்
பிரகாசமான கலைவாழ்வுக்காக இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

இந்து இளைஞர் மன்றத்தினர்,
உடுவில். (69711)

---

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம!

## 31ஆம் நாள் நினைவஞ்சலி
**(6 – 10 – 1999)**

06 – 09 – 1999 அன்று சிவபதமடைந்த தாவடி வடக்கு ஸ்ரீ காமாட்சியம்பாள் தேவஸ்தான முன்னாள் நிர்வாக சபைத் தலைவரும் விஸ்வகுலத் திலகருமாகிய

**அமரர் வீரவாகு ஐயாத்துரை**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவிக்கும் முகமாகவும் அவரது சேவையினைக் கௌரவிக்கும் வகையிலும் இந்த நினைவஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஸ்ரீ காமாட்சியம்பாள் தேவஸ்தான
நிர்வாக சபையினர்.

தாவடி வடக்கு,
கொக்குவில். (69695)

---

## மரண அறிவித்தல்கள்

### தங்கத்துரை சத்தியகீர்த்தி (கீர்த்தன்)

சுப்பர்வளவு அல்வாய் கிழக்குஅல்வாயைச்சேர்ந்த தங்கத்துரை சத்தியகீர்த்தி 1-10-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் க. தங்கத்துரை – பவளநாயகி தம்பதிகளின் அன்பு மகனும் தயாபரன் (திருகோணமலை), ரவிநாதன் [ஹொலண்ட்], சீவரத்தினம் [ஜேர்மனி], கலைமதி, வசந்தகுமாரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் மணிவண்ணன், தனேஸ்வரி, தியாங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மினி, அருண் ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீபன், பிரையன் [ஹொலண்ட] ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [6-10-99] புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கிருஷ்ணன்
[சகோதரன்]

சுப்பர்வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (சி9222)

### திருமதி புனிதவதிஅம்மாள் ஆறுமுகம்

திருமதி புனிதவதிஅம்மாள் ஆறுமுகம் அவர்கள் நேற்று 5-10-99 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இ. ஆறுமுகம் (தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் பவானி, காலஞ்சென்ற இரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நா. சுந்தரலிங்கம் (முன்னாள் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்), ஜித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுநீதன், அமிழ்தன், நித்தியா, வித்தியா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-10-99) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 503, (155) மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நா. சுந்தரலிங்கம்
(மருமகன்)

இல 503, (155) மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [69721]

---

## மூன்றரைக்கோடி ஏழைகள்

உலகின் மிகப் பெரும் செல்வந்த நாடான அமெரிக்காவில் சுமார் 3 கோடி 50 லட்சம் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களில் அதிகமானோர் கறுப்பின மற்றும் லத்தீன் அமெரிக்க குடியேற்ற வாசிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

---

எமது புதிய வீடியோ CD வெளியீடு!

பாண்டியராஜன் – குஷ்பு நடித்த

**உ மனைவிக்கு மரியாதை**

அடுத்த வெளியீடு!

ரஞ்சித் – பிரியாராமன் நடித்த

**உ நேசம் புதுசு**

**சுப்பஸோ வீடியோ**
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/9223)

---

எமது புதிய வீடியோ CD வெளியீடு!

பாண்டியராஜனின்

**மனைவிக்கு மரியாதை**

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம். (சி/9221)

---

## படிவம்

இலங்கை
உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

★ உயர் தேசிய
★ தேசிய டிப்ளோமா

கற்கை நெறி விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:
01 – 11 – 1999

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 3081
(சி/9197)

---

## ஜப்பானிய அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும்

ஜப்பானிய பிரதமர் ஹெய்சோ ஒபூச்சி தனது அமைச்சரவையை மாற்றி அமைக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி கூட்டணியில் இணைந்துள்ள லிபரல் கட்சி மற்றும் பௌத்தர்களிடம் பெரும் ஆதரவு பெற்ற புதிய பொமிக்கோ கட்சி ஆகியவற்றுடன் அண்மையில் நடத்திய பேச்சுக்களில் முக்கிய கொள்கைகள் பற்றிய உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்து இந்த அமைச்சரவையில் மாற்றம் இடம்பெற உள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த அமைச்சரவை மாற்றம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட போதும் ஜப்பானில் ஏற்பட்ட அணுக்கசிவு விபத்தை அடுத்து அமைச்சரவை மாற்றம் பிற்போடப்பட்டது.

எனினும் இன்னும் ஒரு வார காலத்துக்குள் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

## வாழ்த்துகின்றோம்

- இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறும் சகலரையும் வாழ்த்துகின்றோம்.
- ஆசிரியர் தினமாகிய இன்று சகல ஆசிரியர்களையும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**திரு வீடியோ விஷன்**
**கலர் போட்டோ கிராபிக் அன் கலர் லாப்**

T. P. 070-212231

கரணவாய் தெற்கு, நெல்லியடி,
கரவெட்டி. [69673]

---

உ

இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் சகல மாணவ, மாணவியர்களையும்

## வாழ்த்துகின்றோம்

## SIAS நிறுவனம்

தொடர்ந்து மேற்படிப்பைப் படிப்பதற்குரிய சகல ஒழுங்குகளையும் செய்துள்ளது.

**C. I. M. A.** STAGE II + III வகுப்புக்கள் **23-10-99** ஆரம்பமாகும்

& B. COM & MANAGEMENT

பட்டதாரிகள் உங்கள் பெயர்களை உடனடியாகப் பதிவு செய்யவும்.

உ STAGE – I வகுப்புக்கள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் தாமதமின்றி இன்றே சேருங்கள்.

உ A.A.T., I.A.B. வகுப்புக்கள் **14 – 11 – 99** ஆரம்பமாகும்.
சேர விரும்புவோர் உங்கள் பெயர்களை

358, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திலுள்ள எங்கள் காரியாலயத்தில் பதிவு செய்யவும். (69519)

---

ஒக்ரோபர் 10 – உலக உளநல நாள்

## முதுமை என்பதோர் அழகினைப் போற்றுவோம்!

**முதுமை:**
பெயர் விளங்கவரும் பேரப்பிள்ளைகளின் பாட்டன் – பாட்டி மூன்றாவது சந்ததியின் வாழ்வை வளம்படுத்தும் வள ஆளணியினர். பேரரும் பேரரும் கூடிக்குலாவுவது இரு சாரார்க்கும் பயன்தருவது. அதில் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் பரிபூரணத்துவம் எய்துகிறது.

**பண்பாட்டுக் கடத்துகைக்கான சூழலை அமைப்போம்.**

**யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்**

அக்னெஸ்ரி. உளநலச் சங்கம் சுகவாழ்வு சாந்திகம்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 06-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org